# கலாதீபம்

කලාදීබම් KALADEEPAM

தீபம் : 01 01.01.2021 சுடர் : 04


# இருபத்தோராம் நூற்றாண்டின் சவால்களை வெற்றி கொள்வதற்கான ஆசிரிய பயிற்சியாகப் பயணம் அமையட்டும்

## இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பிரதம ஆணையாளர் ஈ.எம். எஸ்.எக்கனாயக்க கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவருக்கு வாழ்த்து



சவால்கள் பலவற்றைக் கொண்ட இந்த உலகில் நெருக்கடிகளை வெற்றி கொள்ளக் கூடிய ஆசிரியர்களாக உங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். 21 ஆம் நூற்றாண்டிற் கேற்ற கற்றல் போக்குகளை எதிர்கொள்ளக் கூடிய ஆசிரியர் கல்வியை உங்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்கின்றோம் என்று தெரிவித்தார் இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பிரதம ஆணையாளர் ஈ.எம்.எஸ்.எக்கனாயக்க. கோப்பாய் ஆசிரிய கலாசாலையும் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையும் இணைந்து நடத்திய 2020 -2021 ஆம் கல்வியாண்டில் அனுமதி பெற்ற புதிய

தொடர்ச்சி பக்-02

## ஆறுமுக நாவலரின் 141 ஆவது குருபூசைத் தினம்



கலாசாலை வாயிலில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் திருவுருவச் சிலைக்கான வழிபாட்டுடன் நாவலர் குருபூசை கடந்த 07.12.2020 கார்த்திகை மகநட்சத்திர நாளன்று அனுட்டிக்கப்பட்டது.

தொடர்ச்சி பக்-02

## சிறப்புற இடம்பெற்ற வெபினார்

கலாசாலைச் சமூகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட 10 ஆவது வெபினார் நிகழ்வு கடந்த 09.12.2020 புதன்கிழமை நடைபெற்றது. ஆரம்பக் கல்வி மாணவர்களின் அடிப்படை எழுத்தறியும் திறனை மேம்படுத்தல் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த இணையவழிக் கருத்தரங்கிற்கு கலாசாலை அதிபர்

தொடர்ச்சி பக்-02




## கலாசாலையில் புதிய ஆண்டுக்கான கற்கை நெறிகள் ஆரம்பம்

2020/2021 கல்வியாண்டுக்கான கற்கைநெறிகள் கடந்த 15.12.2020 அன்று நாடு முழுவதிலும் உள்ள கலாசாலைகளில் ஆரம்பமாகின. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொண்டர் ஆசிரியர்களாக இருந்த பலர் ஆசிரியர் சேவைக்குள் 2019 இல் உள்வாங்கப்

தொடர்ச்சி பக்-04

**இருபத்தோராம் நூற்றா...**

ஆசிரிய மாணவர்களுக்கான சூம் செயலி வாயிலான திசைமுகப்படுத்தல் செயலமர்வின் மூன்றாம் நாள் நிகழ்வில் வாழ்த்துரை வழங்கும் போதே பிரதம ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் - ஆசிரியர் பயிற்சியைப் பொறுத்தவரையில் தேசிய கல்வியியற் கல்லூரிகள் சேவைக்கு முன்பான பயிற்சிகளை வழங்குகின்றன. ஆசிரியர்களாகத் தெரிவாகிய பின்னர் ஆசிரிய பயிற்சியை வழங்கும் முறைமையே ஆசிரிய கலாசாலைகளில் காணப்படுகின்றது. இவற்றைவிட ஆசிரிய வாண்மைத்துவ விருத்தி நிலையங்கள் வலயங்கள் தோறும் அமைந்திருந்து சேவையின் இடையே பயிற்சிகளை வழங்குகின்றன. இலங்கையில் தற்போது எட்டு ஆசிரிய கலாசாலைகள் தமது சேவைகளை வழங்குகின்றன. ஆசிரியர் கல்வியில் புதிய போக்குகளை நாம் அறிமுகம் செய்கின்ற காலமாக இக்காலம் விளங்குகின்றது. எனவே மாற்றங்களை உள்வாங்கும் மனப்பக்குவத்துடன் எதிர்காலச் சவால்களைநாம் எதிர்கொள்ளவேண்டும்.

தற்போதைய கொவிட் சூழலை வெற்றி கொள்ளத்தக்கதாக கோப்பாய் ஆசிரிய கலாசாலையினரால் இணையவழிக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது பாராட்டத்தக்கது. இந்த சூழலின் அவசியத்தை உணர்ந்து அவர்கள் முதலிலேயே வெபினார் செயற்பாட்டை முன்னெடுக்கத் தொடங்கி இருந்தனர். அந்த வெபினாரிலும் நான் பங்கெடுத்திருக்கிறேன் என்றார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் வீ.கருணலிங்கம் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையின் அதிபர் எம்.சி.யுனைட் ஆகியோரது இணைத் தலைமையில் நடைபெற்ற திசைமுகப்படுத்தல் நிகழ்வுகளில் முதலாம் நாள் (15.12.2020) இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பணிப்பாளர் ஆர்.எம்.எம்.ரத்னாயக்காவும், இரண்டாம் நாள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவனும் நான்காம் (நிறைவு) நாள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தமும் வாழ்த்துரைகளை வழங்கினர்.

இரண்டு கலாசாலைகளின் அதிபர்களும் தமது கலாசாலை பற்றிய அறிமுகத்தையும் கல்விசார் ஆளணி பற்றிய அறிமுகத்தையும் மேற்கொண்டனர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் - கலாசாலையில் பாடநெறி பற்றிய தெளிவையும் உப அதிபர் த.கோபாலகிருஷ்ணன் - ஆசிரிய கல்வியில் கணிப்பீட்டுமுறை பற்றிய தெளிவையும் விரிவுரையாளர் த.தவசேகர் 21 ஆம் நூற்றாண்டில் ஆசிரிய கல்வி என்ற பொருளிலும் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை அதிபர் எம்.சி. யுனைட் - ஆசிரிய கல்வியில் சமகாலத்தில் எதிர்கொள்ளப்படும் எழுவினாக்கள் என்ற பொருளிலும் கருத்துரைகளை ஆற்றினர். முதல் மூன்று நாள்களும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் வி.எஸ்.குணசீலன் - சூம் தொழில்நுட்பத்தைக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவது எவ்வாறு எனப் புதிதாக அனுமதி பெற்ற ஆசிரிய மாணவர்களுக்கு விளக்கமளித்தார். இரண்டு கலாசாலைகளையும் சேர்ந்த 380 இற்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் நான்கு நாள்கள் இடம்பெற்ற பயிலரங்குகளில் பங்கேற்றிருந்தனர்.

**ஆறுமுக நாவலரின்...**

இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம், பிரதி அதிபர் ச.லலீசன், இந்துமன்றக் காப்பாளர் ஜானகியம்மாள் தர்மஜீலன் ஆகியோர் நாவலர் திருவுருவச் சிலைக்கு மலர் மாலைகளை அணிவித்தனர்.

நிகழ்வில் இந்துமன்ற ஆசிரிய மாணவர்கள் நாவலர் பிரார்த்தனைப் பாடல்களை இசைத்தனர். பிரதி அதிபர் நாவலரின் பெருமைகள் குறித்து கூடி நின்றவர்களிடையே சிற்றுரை ஆற்றினார். நிகழ்வில் கலந்துகொண்ட விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்கள் யாவரும் நாவலர் திருவுருவச் சிலைக்கு மலர்வணக்கம் மேற்கொண்டனர்.

**சிறப்புற இடம்பெற்ற...**

வீ.கருணலிங்கம் தலைமை வகித்தார். வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் வாழ்த்துரை வழங்கினார். கொழும்புப் பல்கலைக்கழக கல்வியியல் பீட விரிவுரையாளர் அ.பௌநந்தி எழுத்தறிவிக்கும் இறைவன் என்ற தொனிப்பொருளில் கருத்துரை ஆற்றினார். அண்மையில் வெளிவந்த தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 98 மாணவர்கள் தோற்றிய பரீட்சையில் 38 மாணவர்களை வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தியடையச் செய்த சாதனை அதிபர் இ.கோகுலராகவன் (புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த ஆரம்பப் பாடசாலை) தனது வெற்றிப் பயணத்தின் அனுபவங்களை ஆசிரியர்களுடன் பகிர்ந்துகொண்டார். கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் நிகழ்வை ஏற்பாடு செய்து நெறிப்படுத்தினார்.

# கலாதீபம்

කලාදීපම් KALADEEPAM

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின்
மாதாந்த மின்னிதழ்.
A monthly e magazine of Kopay
Teachers' college.
කෝපායි ගුරු විද්‍යාලයීය
මාසික විද්‍යුත් සඟරාව


## நமது நோக்கு

### ஆசிரிய மாணவர்களுக்கு இலகுக்கடன் திட்டம் ஏற்படுத்தப்படுமா?

எவ்வளவோ எதிர்பார்ப்புகளுடன் மலர்ந்த 2020 எமக்கு வாணாள் துயர்தந்து வாழ்க்கையை வீணாள் ஆக்கிய ஆண்டாகிவிட்டது. இந்நிலையில் தான் 2021 எவ்வாறு அமையுமோ என்ற கேள்வி எம்முள் எழுந்து நிற்கின்றது.

துன்பத்திற்குள்ளும் சில சாதக பக்கங்கள் என்ற வகையில் இணையவழிக் கற்றல் இணையவழி பொருள் விற்பனை என்று நிகழ்நிலை இணையச் செயற்பாடுகள் எம்முள் வேரூன்ற இந்த இடர்காலப் பகுதி வழிசமைத்திருக்கின்றது.

கொவிட் தாக்கத்திற்கான தடுப்பூசி நம்பிக்கை தரும் விடயமாக அமைந்தபோதிலும் அது பற்றிய எதிர்பார்க்கைகள் நம் போன்ற மூன்றாம் மண்டலத்தாருக்கு எப்போது வாய்க்குமோ என்ற அங்கலாய்ப்பாகவே உள்ளது.

பாடசாலைகளை மீண்டும் இயல் புநிலையில் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் தொடரப்படுகின்ற போதிலும் கலாசாலைகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளை மீண்டும் இயல்புநிலையில் இயங்கவைப்பதற்கான தெளிவான மார்க்கங்கள் புலப்படவில்லை.

இணையவழியில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளே. தொடர்ந்தும் முன்னெடுக்கப்படக் கூடிய சூழல்தான் கண்களுக்குத் தெரிகின்றது. ஆசிரிய கல்வியில் சாத்தியப்படக் கூடிய மார்க்கமாக நிகழ்நிலை இணையவழிக் கல்வியே தென்படுவதால் அதனை வினைத்திறன் ஆக்கவேண்டிய தேவை விரிந்து கிடக்கின்றது.

கற்றலுக்காக இணையத்தை நாடுவோருள் மிகப் பலர் தமது திறன்பேசியையே (சிமாட் போன்) பெரும்பாலும் நம்பியுள்ளனர். இருப்பினும் இது ஆரோக்கியமான கற்றலுக்கான வசதிகளை போதிய அளவிற்கு வழங்குவதில்லை என்பதைப் பலரும் அனுபவத்தில் கண்டுள்ளனர்.

மடிக்கணினி (லப்ரொப்) உபயோகித்துக் கற்றல் நடிவடிக்கைகளை மேற்கொள்ளும் போது கண் சார்ந்த பாதகமான பிரச்சினைகளுக்கும் ஓரளவு தீர்வு கிடைப்பதுடன் அகன்ற திரை

தொடர்ச்சி பக்-04

## கலாதீபம் குழுமம்

**கலாதீபம் குழு**

**நெறிப்படுத்தல்**

திரு. வீரகத்தி கருணலிங்கம்
(அதிபர்)

**வள ஆலோசனை**

திரு. தங்கராசா கோபாலகிருஷ்ணன்
(உப அதிபர்)

**பிரதம ஆசிரியர்**

திரு. சந்திரமௌலீசன் லலீசன்
(பிரதி அதிபர்)

**ஆசிரியர் குழு**

திரு. கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர்)
செல்வி. மாலதி பத்மநாதன்
(விரிவுரையாளர்)
திரு. வேலும்மயிலும் நந்தகுமார்
(விரிவுரையாளர்)
திருமதி சிவசக்தி ஜெயராஜா
(விரிவுரையாளர்)
திரு இராமலிங்கம் இளங்கீரன்
(ஆசிரிய மாணவர் – ஆரம்பக்கல்வி)
செல்வி நிவேதா சத்தியசீலன்
(ஆசிரிய மாணவி — த.தொ.தொழினுட்பம்)

*கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையராவர். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாகக் கொள்ளப்படமாட்டா.*

**வெளியீடு**

கோப்பாய் ஆசிரிய கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி : 0212230323

# 2018/2019 கல்வியாண்டுக்குரிய ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சையை விரைவில் நடத்துங்கள்

## கலாசாலைகளின் அதிபர்கள் கூட்டாக வேண்டுகோள்

கடந்த 2020 செப்ரெம்பரில் கற்கையை நிறைவு செய்த 2018/2019 கல்வியாண்டுக்குரிய ஆசிரிய மாணவர்களுக்கான பரீட்சையை 2021 ஜனவரி மாதம் அல்லது பெப்ரவரி மாதத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நாடு முழுவதிலும் உள்ள கலாசாலை அதிபர்கள் கூட்டாகக் கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்தனர். அதிபர்கள் சார்பில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையினரால் இவ்வேண்டுகோள் முன் வைக்கப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்ட பணிப்பாளர் ஆர்.எம்.எம் ரத்னாயக்கா உடனடியாகவே பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் பூஜித ஜெயசுந்தரவின் கவனத்திற்கு அதனைக் கொண்டு வந்தார். விரைவில் இது குறித்த முடிவினை அறிவிப்பதாகவும் இதன்போது பதிலளிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த 14.12.2020 அன்று இடம்பெற்ற கலாசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டத்தின் போது இடம்பெற்றது. கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் சூம் வசதியைப் பயன்படுத்தி கல்விப் பணிப்பாளர் ஆர்.எம். எம்.ரத்னாயக்கா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதன்போது நாடு முழுவதிலும் உள்ள எட்டு ஆசிரிய கலா சாலைகளதும் அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்கள், உப அதிபர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

2020/2021 கல்வியாண்டுக்குரிய கற்கைநெறி பற்றியதாகவே கூட்டம் நடத்தப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவித்த ஆசிரிய கல்விப் பணிப்பாளர் இணையவழியில் ஆசிரிய மாணவர்களின் வருகை குறித்த பதிவேடு பேணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். அத்துடன் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கற்கை நெறிகளைத் தொடர்வதற்குப் பல மாணவர்கள் பல்வேறு தரப்பினர் ஊடாகக் கல்வி அமைச்சை வலியுறுத்துவதாகவும் இருந்த போதிலும் அங்குள்ள மாணவர் எண்ணிக்கை 550 இனைக் கடந்துவிட்டமையால் இந்த ஆண்டு அனுமதிக்க முடியாதெனவும் கூறினார்.

---

### யாழ்ப்பாணம் தேசிய கல்வி...

உடன் கற்றலுக்கான மேம்படுத்தப்பட்ட சூழலும் கிடைக்கப் பெறுகின்றது.

இருப்பினும் லப்ரொப் வசதியை சாதாரண ஆசிரியர்கள் பெற்றுக்கொள்வதாயின் இலட்சக்கணக்கான ரூபாக்களை முதலிடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது. இதற்கெனக் குறைந்த வட்டியில் வங்கியில் கடன் கொடுக்கும் திட்டமும் வினைத்திறனாகக் காணப்படவில்லை.

லப்ரொப் கடனைவிட சாதாரண கடனுக்கான வட்டிவீதம் குறைவாக இருக்கின்றமையை வங்கியாளர்கள் ஊடாக அறியமுடிந்தது. 2021 இலும் இனி வரப்போகின்ற காலங்களிலும் நிகழ்நிலை இணையவழிக் கல்வி நடவடிக்கைகளை இயல்பாக முன்னெடுப்பதற்கும் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் சார்ந்த அறிவை மேம்படுத்துவதற்கும் ஆசிரிய மாணவர்களுக்கு லப்ரொப் சாதனம் அவசியமாகின்றது. கல்விக்காகச் செலவிடும் நிதியில் - ஆசிரியர்களுக்காக மானியவிலையில் லப்ரொப் வழங்கும் திட்டத்தை அரசு செயற்படுத்த வேண்டும். இதன் வாயிலாக கற்றல் கற்பித்தல் நடிவடிக்கைகளில் மேம்படுத்தப்பட்ட செயற்பாடுகளை ஆசிரிய உலகு முன்னெடுப்பதற்கு வாசல் திறக்கப்படும்.

காலத்தின் கட்டாயமாகக் கல்வி அமைச்சின் முன் விரிந்துகிடக்கும் பொறுப்பு இதுவாகும்.

### கலாசாலையில் புதிய...

பட்டமையால் தமிழ்மொழி மூலம் கல்வி வழங்கும் ஆசிரியர் கலாசாலைகளில் உள்வாங்கப்படும் ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது. கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு 2020 மாணவர்கள் உள்வாங்கப்பட்ட நிலையில் இச்சஞ்சிகையின் அச்சமைப்புக் காலம் வரை 179 மாணவர்கள் தம்மை ஆசிரிய மாணவர்களாகப் பதிவுசெய்துள்ளனர். அந்த வகையில் ஆங்கில நெறி - 03, மனைப் பொருளியல் - 02, வணிகம் - 05, ஆரம்பக்கல்வி- 122, கணிதம் - 20, சங்கீதம் - 08, இந்துசமயம் - 08, தமிழ் - 11 என இவர்களின் பதிவு எண்ணிக்கை அமைந்துள்ளது.

ஆரம்பக்கல்வி ஆங்கிலம் என்ற நியமன வகுதியில் உள்வாங்கப்பட்டவர்கள் ஆரம்பக் கல்விக்கான ஆசிரிய பயிற்சியையே மேற்கொள்ளவேண்டும் எனக் கல்வி அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டிருப்பதால் இந்த நியமனத்தைப் பெற்ற கணிசமான ஆசிரியர்கள் பலர் தம்மை ஆசிரிய பயிற்சிக்காகப் பதிவு செய்வதில் இருந்து தவிர்த்து வருகின்ற நிலைமையும் காணப்படுகின்றது. இவர்களுக்கான கல்வியாண்டு எதிர்வரும் 14.12.2022 வரையான ஈராண்டு காலப்பகுதியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர் கல்வியில் கணிப்பீடு

த.கோபாலகிருஷ்ணன்
உப அதிபர்
கோப்பாய் ஆசிரிய
கலாசாலை



**கணிப்பீடு** (Assessment)

*. மாணவர் வகுப்பறையில் கற்றலில் ஈடுபட்டுள்ள வேளைகளில் அவர்களுடன் ஆசிரியர் இருந்துகொண்டே கற்றல் திறன், திறமையின்மை ஆகியவை தொடர்பாக அடிக்கடி கண்காணிக்கப்பட்டு, கற்றல் செயற்பாட்டுக்கு உடலாலும், உள்ளத்தாலும் உதவியளித்து, எதிர்பார்க்கும் தேர்ச்சி மட்டத்திற்கு மாணவர்களை அழைத்துச் சென்றும், அவர்களிடத்தில் ஆளுமைப்பண்புகளை விருத்தி செய்வதையும் இலக்காகக் கொண்டு அறிமுகப் படுத்தப்பட்டுள்ள ஒன்றே கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டமாகும்.

*. கணிப்பீடு என்பது ஆசிரியர்கள் தமது மாணவரின் முன்னேற்றத்தினைக் கருதி, வெவ்வேறு தீர்மானங்கள் எடுப்பதற்காக சோதனைகள், அவதானிப்புக்கள், இடையறாத தேடியறிகைகள் மற்றும் ஏனைய முறைகளின் ஊடாக தகவல் சேகரித்தலும், அவற்றை வியாக்கியானம் செய்தலும் பயன்படுத்தலும் ஆகும்.

*. இக் கணிப்பீடுகள் ஆசிரியர் கலாசாலைக் கற்கை நெறிகளில் உள்ள பின்வரும் மூன்று வகைப் பாடங்களுக்கும், பின்வரும் ஒழுங்கு முறையில் பாட விரிவுரையாளர்களால் நடாத்தப்பட வேண்டும்.

*. ஆசிரிய கலாசாலைப் பயிற்சியில் உள்ள ஒவ்வொரு பாடங்களுக்கும் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

*. இறுதிப் பரீட்சை அடைவு மட்டத்தை தீர்மானிப்பதற்காக நான்கு உள்வாரி கணிப்பீட்டு முறைகள் பயன்படுத்த வேண்டும்.

*. முப்பது மணித்தியாலக் கற்பித்தல் பூர்த்தியடைந்த பின்னரே கணிப்பீடு ஒன்றை மேற்கொள்ள முடியும் என தேசிய கல்வி நிறுவகம் தனது வழிகாட்டல் ஏட்டில் குறிப்பிட்டுள்ளது. இதனை தவணை ரீதியாக தெளிவுபடுத்த முடியும்.

*. தவணை ஆரம்பத்தில் ஆசிரிய மாணவர்களுக்கு, அத்தவணையில் பூர்த்திசெய்ய வேண்டிய கணிப்பீடுகளுக்குரிய தலைப்புகளையும் அறிவுறுத்தல்களையும் விரிவுரையாளர்கள் வழங்குவதுடன், கணிப்பீட்டு முன் ஆயத்தத் திட்டத்தினை பிரதி அதிபர் (கல்வி அபிவிருத்தி) அவர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

*. விரிவுரையாளர்கள் தாம் கணிப்பீட்டுக்காக பயன்படுத்திய சகல கணிப்பீட்டுப் படிவங்களையும் தேவையேற்படும் சந்தர்பங்களிலே பரீசீலிப்பதற்காகப் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

இறுதிப் பரீட்சைக்கு கணிப்பீட்டுப் புள்ளிகளும், பரீட்சைப் புள்ளிகளும் இறுதிப் பெறுபேற்றுக்கு சேர்த்துக் கொள்ளப்படும் முறை.

ஒவ்வொரு கணிப்பீடுகளும் நியதிகளின் அடிப்படையில் 100க்கு புள்ளியிடப்படும்.






*. அந்த 100 புள்ளியை 40% இற்கு மாற்றியே இறுதிப் பெறுபேற்றுக்கு சேர்த்துக் கொள்ளப்படும். (உ-ம்) - ஒரு கணிப்பீட்டில் பெற்ற புள்ளி 80 ஆயின் அதனை 40% இற்கு மாற்றினால் X 40 = 32 புள்ளிகள்

*. இந்த 32 புள்ளியே இறுதிப் பெறுபேற்றுக்கு சேர்த்துக் கொள்ளப்படும்.

*. இறுதி எழுத்துப் பரீட்சைக்குரிய புள்ளியை 60% இற்கு மாற்றியே இறுதிப் பெறுபேற்றுக்கு சேர்த்துக்கொள்ளப்படும்.

(உ-ம்)- இறுதிப் பரீட்சைப் புள்ளி 60 ஆயின் அதனை 60% இற்கு மாற்றினால் X60 = 36 புள்ளிகள்

*. ஒருவர் பெற்ற கணிப்பீட்டுப் புள்ளி = 32

*. பரீட்சைப் புள்ளி = 36

*. மொத்தம் 68

*. ஆயினும் இறுதி எழுத்துப் பரீட்சையில் கட்டாயம் 40 புள்ளிகளையாவது ஒருவர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

*. 40 புள்ளிகளுக்கு குறைவாக எழுத்துப் பரீட்சையில் புள்ளியினைப் பெற்றால், கணிப்பீட்டுப் புள்ளியை இறுதிப் பெறுபேற்றுக்குச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

*. அந்நிலையில் பரீட்சார்த்தி சித்தி அடையத்தவறினால். அவர் இரண்டாவது தடவை பரீட்சைக்கு தோற்றுகின்ற போது கணிப்பீட்டுப் புள்ளிகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. அவரின் எழுத்துப் பரீட்சைப் புள்ளிகளை வைத்தே பெறுபேறு கணிக்கப்படும்.

பாடசாலைகளில் மேற்கொள்ளக் கூடிய ஏனைய கணிப்பீட்டு வகைகள்

1. அளவாய்வு (Survey)
2. கண்டறிக்கை (Diacovery)
3. அவதானித்தல்
4. கண்காட்சி
5. களப்பிரயாணங்கள்
6. எழுத்து மூலக் குறுங்கோணங்கள்.
7. கட்டமைப்புக் கட்டுரைகள்
8. ஆக்கச் செயற்பாடுகள
9. கேட்டல் சோதனைகள்
10. செயன்முறைச் செயற்பாடுகள்
11. சொற்பொறிமுறை
12. சுயஆக்கத் தொகுப்பு
13. குழுச்செயற்பாடு
14. இரட்டை நிரற்பதிவேடு

மேலும்

1. சுவரேடு (Wall Bulletin)
2. வினாவிடைப் புத்தகங்கள்
3. குழுக் கலந்துரையாடல்கள்
4. உடனடிச் சொற்பொழிவுகள்
5. வினாவிடை நிகழ்ச்சிகள்
6. விவாதங்கள்
7. கருத்தரங்குகள்
8. பங்கேற்று நடத்தல்கள்

*. இவற்றுள் ஆசிரியர்கள் தமது பாடத்திற்கும் பாடசாலைக்கும் பொருத்தமான கணிப்பீட்டு வகைகளை தெரிவுசெய்து கொள்ளமுடியும்.

**1. எழுத்து மூல ஒப்படை** (Assignment)

*. யாதேனும் பாடப்பகுதியின் கோட்பாட்டு அறிவிலும் செயன்முறைப்பரப்பிலும் அடங்கியுள்ள விடயங்களைத் பயிலுவதற்காக ஆசிரியரின் வழிகாட்டல், மேற்பார்வை என்பவற்றின் கீழ் மாணவராலேயே நிறைவு செய்யப்படும் ஒரு செயன்முறையே ஒப்படை எனப்படும்.'

*. உள்வாரிக் கணிப்பீடு மதிப்பீடுக்காக எழுத்து மூல ஒப்படை ஒன்று மாத்திரமே வழங்கப்பட வேண்டும்

*. இதற்கான நியதிகள் பொருத்தமான வகையில் தெரிவு செய்து கணிப்பீடு செய்யலாம்.

*. எதிர்பார்க்கப்படும் கற்றல் பேறுகள்

*. மாணவர்கள் விடை காண்பதற்காக ஒரு



குறித்த பிரச்சினையை இனங்கண்டு கொள்வர்.

*. அப் பிரச்சினைக்குரிய தீர்வை மாணவர்கள் தேடியறிவார்.

*. குறித்த கால வரையுள் துலங்கலை முன் வைப்பார்.

## 2. செயற்றிட்டம் (Project)

ஆசிரியரின் வழிகாட்டலுடன் பாடப்பரப்புக்கு அமைவாக மாணவர்களால் இணங்காணப்படும் ஒரு பிரச்சினையை அல்லது தலைப்பை அல்லது நிகழ்வை அல்லது செயலை கருப்பொருளாகக் கொண்டு குறித்த கால வரையறையினுள், பிரச்சினைக்குரிய தரவுகளைச் சேகரித்து பகுப்பாய்வு செய்தல், முடிவெடுத்தல், தீர்வுப் பிரேரணைகளை முன்வைத்தல் ஆகிய படிமுறைகளை உள்ளடக்கிய ஒரு செயன்முறைக்கு அமைவாக தயாரிக்கப்படும் குறு அறிக்கை செயற்றிட்டம் எனப்படும்.

### எதிர்பார்க்கப்படும் கற்றல் பேறுகள்

1. அறிந்துறைகள், தகவல்களின் ஊடாக பிரச்சினை ஒன்றினை இனங்காண்பார்.
2. செயற்றிட்டம் இடுவர்.
3. அப்பிரச்சினை தொடர்பாக தேடல் நடாத்தி தகவல் சேகரிப்பார்.
4. தகவல்களைக் கொண்டு முடிவெடுப்பார்.
5. இறுதி ஆக்கமாக அறிக்கை முன்வைப்பார்.

## 3. தனியாள் முன்வைப்பு

(Power point Presentation)

*. தாம் கற்றவற்றை தமது அனுபவங்களுடனும் , ஆக்கத்திறனுடனும் கலந்து உருவாக்கிய ஆக்கங்களை வெளியிட அறிமுகம் செய்வதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

*. பாடத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரு பாட விடயப்பகுதியில் அல்லது உப அலகின் அல்லது அலகின் குறிக்கோள்களுக்கமைவாக ஆசிரியரது வழிகாட்டலின் கீழ் மாணவர்களினால் அல்லது மாணவ குழுக்களினால் ஆக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட சித்திரங்கள், வரைபுகள், புகைப்படங்கள், அட்டவணைகள், சுவரொட்டிகள், மாதிரிஉருக்கள், வழுக்கள் (SILDES) வீடியோ நாடாக்கள், சிறுதட்டுகள் போன்றவற்றைக் கொண்டு தகவல்களை முன்வைத்தலே முன்வைப்பு எனப்படும்.

*. இது தனியாள் செயற்பாடாகவோ குழச் செயற்பாடாகவோ அமையலாம்.

## 4. திறந்த நூற்சோதனை (Open Book Test)

*. யாதேனும் விடயம் அல்லது நிகழ்வு அல்லது பிரச்சினை தொடர்பாக மாணவர்களுக்கு வழங்கப்படும் சோதனைக்காக அவ்விடயம் அல்லது நிகழ்வு அல்லது பிரச்சினை சார்ந்த நூல்களை உசாவி விடைகளை நேரடி ஒழுங்குபடுத்தி தகவல்களைத் தேடிப்பெறத் தூண்டும் ஒரு உத்தியே திறந்த நூற்சோதனை எனப்படும்.

### எதிர்பார்க்கப்படும் கற்றல் பேறுகள்

1. வழங்கப்பட்ட குறிப்பான பிரச்சினைக்கு விடை காண்பர்.
2. நூல்களை உசாவி தேவையான தகவல்களைத் திரட்டுவார்.
3. உரிய அல்லது குறித்த நேர வரையறையினுள் தமது கற்றலை வெளிப்படுத்துவர்.

## 5. குழுச் செயற்பாடு, தனியாள் செயற்பாடு (Group Activites)

*. இது யாதேனும் பாடப்பகுதியின் கற்றற் குறிக் கோள்களுக்கு அமைவாக தகவல் சேகரித்தல், அறிக்கைப்படுத்தல், முன் வைத்தல், மீளாய்வு செய்தல் போன்றவற்றைச் செய்வதற்குப் பொருத்தமான ஒரு கணிப்பீட்டு வகையே குழச்செயற்பாடு எனப்படும்.

*. இதற்கான



போதுமான கால அவகாசம் வழங்குதல் வேண்டும். மாணவர்கள் குழுச்செயற்பாட்டின் ஊடாக ஒரு முடிவுப்பேற்றை முன்வைத்தல் வேண்டும்.

### எதிர்பார்க்கப்படும் கற்றல் பேறுகள்

1. நிகிழும் தன்மயுடைய ஒரு தலைப்பை தொகுத்துக் கொள்வார்.
2. சுயாதீனமாக நடைமுறைப்படுத் தலுக்கான ஒரு திட்டத்தை தயாரித்துக் கொள்வார்.
3. தமக்குத் தாமே வழிகாட்டிக் கொள்வார்.
4 பின்னூட்டல் வழங்கிக் கொள்வார்
5. இவற்றை தனியொரு மாணவன் செய்வதே தனியாள் செயற்பாடாகும்.

## 6. படைப்பாக்கங்கள்

(Creative Activities)

*. மாணவர்கள் தாம் விருத்தி செய்துகொண்டுள்ள தேர்ச்சிகளைக் கொண்டு ஆக்க பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுதலே படைப்பாக்கச் செயற்பாடாகும்.

*. இதன் மூலம் சித்திரங்கள் சுவரொட்டிகள், நாடகம், கவிதைப் பாடப்பண்புகள், கட்டுரைகள், பல்வேறு பங்கேற்பு நடவடிக்கைகள் போன்ற ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தாம் கற்றவற்றை துணையாகக் கொண்டு புத்தாக்கம் படைக்க வாய்ப்பு வழங்கப்படுவதே இதன் தார்பரியமாகும

## 7. எண்ணக்கருப் படம்

(Concept Maps)

ஆசிரியரால் வலியுறுத்தப்பட்ட பிரதான எண்ணக்கருவுக்கும் மாணவர் கற்றுள்ள ஏனைய எண்ணக்கருக்களுக்கும் இடையிலான தொடர்புகளை மாணவர்கள் காணும் விதத்தைக் காட்டுவதற்காக அவர்கள் வரையும் கோட்டுப்படமே எண்ணக்கருப் படம் எனப்படும்.

### எதிர்பார்க்கப்படும் கற்றல் பேறுகள்

1. தகவல்களைப் பகுப்பார்.
2. மாறிகளுக்கிடையே பரஸ்பர செல்வாக்குகளை விபரிப்பார்.
3. முடிவுப்பொருளை ஆக்குவதற்காக தமது அனுபவங்களைப் பெருமளவுக்குப் பயன்படுத்துவார்.

## 8. அளவாய்வு (Survey)

தமது பாடத்திற்கமைவாக ஒரு பிரச்சினையை அல்லது காணப்படும் ஒரு நிலமையைத் தெரிவு செய்து அது தொடர்பான தகவல்களை வினாக்கொத்து அல்லது பங்குகொண்டு அவதானித்தல், நேர்காணல் மூலம் சேகரித்து, அவற்றைப் பகுப்பாய்வு, செய்து, அறிக்கைப்படுத்துவதன் மூலம், தெரிவுசெய்த பாடப்பரப்புக்குரிய பாடவிடயங்களைப் கற்பதே அளவாய்வு எனப்படும்.

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்

1. வினாக்கொத்து அல்லது பங்கொண்டு அவதானிப்பு அல்லது நேர்காணல் மூலம் தகவல்களைச் சேகரிப்பார்.
2. வினாக்கொத்தை முன்கூட்டியே திட்டமிடுவார்.
3. தகவல்களைப் பகுத்தாய்வார்
4. படங்கள், அட்டவணைகள், வரைபுகளைப் பயன்படுத்தி முன்வைப்புச் செய்வார்.
5. அறிக்கை தயாரித்து முன்வைப்பார்

ஆசிரிய கலாசாலைக் கணிப்பீட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவதன் ஊடாக வளமிக்க ஆசிரியர் கல்விக்கு உரித்துடையவராகலாம்.



# ஆசிரிய கலாசாலைகளில் ஆசிரிய கல்விப் பாடநெறிகளுக்கு ஓர் அறிமுகம்

ச.லலீசன்
பிரதி அதிபர்
கோப்பாய் ஆசிரிய
கலாசாலை



இலங்கையில் ஆசிரிய கல்வியை வழங்கும் நிறுவனங்களுள் ஆசிரிய கலாசாலைகள் பழைமையானவை. பயிற்சி பெற்ற ஆசிரியர்களே பிள்ளைகளுக்கு வாண்மைத்துவம் மிக்க கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்க வல்லவர்கள் ஆவர். இந்த வகையில்

ஆசிரிய பயிற்சியின் நன்மைகளாகப் பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.

01. பிள்ளையின் தன்மையை விளங்கிக்கொள்ளல்
02. மாணவரிடையே காணப்படும் தனியாள் வேறுபாடுகளை விளங்கிக்கொள்ளல்
03. கற்றல் கற்பித்தல் நுட்பங்களை அறிந்து கொள்ளல்.
04. பாடசாலை முறைமையை அறிந்துகொள்ளல்
05. கற்றல் இடமாற்றம் நிகழும் வகையில் கற்பித்தல்.
06. ஆசிரியர் தம்மைப்பற்றிய விளக்கத்தைப் பெறல்.
07. கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்தல்.
08. மாணவருக்கு வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல்.
09. ஆசிரிய சேவையில் பதவி உயர்வு பெறல்.

தற்போது இலங்கையில் ஆசிரிய கல்வியைப் பெறக்கூடிய நிலையங்களாகப் பின்வருவன விளங்குகின்றன.

01. அரச பல்கலைக்கழகங்கள்
02. தேசிய கல்வி நிறுவகம் (NIE)
03. தேசிய கல்வியியற் கல்லூரி (NCOE)
04. அரசினர் ஆசிரிய கலாசாலை (GTC)
05. ஆசிரிய வாண்மை விருத்தி மத்திய நிலையம் (Teacher Centre)

இலங்கையில் எட்டு அரசினர் ஆசிரிய கலாசாலைகள் தற்போது செயற்படுகின்றன. இலங்கையில் சமயப் பின்புலத்திலேயே கலாசாலைகள் செயற்படத் தொடங்கின. இருந்தபோதிலும் 1945 இல் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் பலர் ஆசிரிய நியமனத்தைப் பெற்றனர். இந்தச் சூழலில் கலாசாலைகளும் அதிகளவில் உருவாகின.

01. கோப்பாய் ஆசிரிய கலாசாலை
02. மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை
03. அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை
04. கொட்டகல ஆசிரிய கலாசாலை
05. உணவட்டுண ஆசிரிய கலாசாலை
06. பலப்பிட்டிய ஆசிரிய கலாசாலை
07. கிராகம ஆசிரிய கலாசாலை
08. கம்பொல ஆசிரிய கலாசாலை (ஆங்கிலம்)

மேற்கண்டவற்றுள் முதல் நான்கும் தமிழ்மொழி மூலப் பயிற்சியையும் அடுத்துவரும் மூன்றும் சிங்கள மொழிமூலப் பயிற்சியையும் கம்பொல ஆசிரிய கலாசாலை ஆங்கில மொழியிலான பயிற்சியையும் வழங்குகின்றன.

ஆசிரிய கல்விக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக கலாசாலைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன அனைத்துவிதமான அனுபவத் தொகுதிகளின் கூட்டுச் சேர்க்கையே கலைத்திட்டம் ஆகும்.

ஆசிரிய கலாசாலைகளின் கற்கை நெறி இரண்டு வருடங்கள் படிப்பு விடுமுறையுடன் கூடியதாக நடைபெறுகின்றது. இது வதிவிடப் பயிற்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டுள்ள போதிலும் கலாசாலைகளில் போதிய வதிவிட வசதிகள் இன்மையால் அதனை நடைமுறைப்படுத்துவதில் சாத்தியப்பாடான தன்மை காணப்படவில்லை. இதனால் பெரும்பாலான கலாசாலைகளின் வேலை நேரம் வார நாள்களில் காலை 8 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணி வரையானதாக அமைகின்றது. இந்த நேரத்திலேயே பாடவிதானம் இணைப்பாட விதானம் முதலிய செயற்பாடுகள் யாவும் நடைபெறுகின்றன.

இந்த இரண்டு வருடங்களில் பாடச் செயற்பாடுகள், இணைபாடவிதானச் செயற்பாடுகள்,

கற்பித்தற் பயிற்சி, கணிப்பீட்டுச் செயற்பாடுகள் என்பன நிறைவேற்றப்படும். இவை மூன்று பெரும் பிரிவுகளில் அடங்கும்

01. தொழிற்பாடங்கள்
02. பொதுப்பாடங்கள்
03. நெறிப்பாடங்கள்

இவற்றை விடக் கற்பித்தல் பயிற்சி (பாட இல. 98) நான்கு தடவைகள் (2 வார காலங்கள் கொண்டதாக எல்லாமாக எட்டு வாரங்கள்) பாட சாலைகளில் மேற்கொள்ளப்படும்.

பல்துறை ஆளுமைக்குரிய ஆசிரியராக ஒருவரை உருவாக்கும் வகையில் இப்பயிற்சி நெறியின் உள்ளடக்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவர் பாடசாலையில் எத்தகைய சந்தர்ப்பத்திற்கும் ஈடுகொடுக்கக் கூடியவராகத் தன்னைப் புடம்போட்டுக் கொள்ள முடியும். இவரால் தனது பாடத்துறைக்கு அப்பால் விளையாட்டுப் போட்டியாயினும் சமய விழாக்கள் ஆயினும் எதனையும் நடத்தக் கூடிய திறனைப் பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

"பல்துறை ஆளுமைக்குரிய ஆசிரியராக ஒருவரை உருவாக்கும் வகையில் இப்பயிற்சி நெறியின் உள்ளடக்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவர் பாடசாலையில் எத்தகைய சந்தர்ப்பத்திற்கும் ஈடுகொடுக்கக் கூடியவராகத் தன்னைப் புடம் போட்டுக் கொள்ளமுடியும்.

கலாசாலைகளுக்கு தற்போதைய ஆட்சேர்ப்பு முறைமையின் பிரகாரம் நியமனம் பாடம் எதுவோ அதற்குரிய பயிற்சிக்கே மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். ஆயினும் எந்தப் பாடத்திற்குரிய நியமனம் பெற்றாலும் அவர் விரும்பினால் விசேட கல்விப் பாடத்தைப் பயில முடியும் என்ற ஏற்பாடு தற்போது வர்த்தமானியின் ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளது."

இதனாலேயே பாடத்துறைக்கு அப்பால் இல்ல மெய்வன்மைப் போட்டி, வீதி ஓட்டம், தமிழ் விழா, சமய விழாக்கள் என பாடசாலைக் குரிய செயற்பாடுகள் இங்கும் நடைபெறுகின்றன.

**இனிப்பாடத்துறை பற்றி நோக்குவோம்.**

## 1) தொழிற்பாடங்கள்

01. கல்வி உளவியல் (பாட இல 01)
02. கல்வித் தத்துவங்களும் பாடசாலை முகாமைத்துவமும் (கல்வியியல்) - (பாட இல.02)
03. கல்வியில் அளவீடும் மதிப்பீடும் கணிப்பீடும் - பாட இல. 03

இப்பாடங்கள் எல்லா நெறியினரும் கட்டாயமாகக் கற்கவேண்டியவை.

## 2) பொதுப்பாடங்கள்

01. முதலாம் மொழி தமிழ் - பாட இல 402
02. சுகாதாரமும் உடற்கல்வியும் - பாட இல 403
03. அழகியல் (இசை, நடனம், சித்திரம், நாடகம்) பாட இல. 404
04. தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (ICT) பாட இல. 405
05. ஆங்கிலம் - பாட இல. 406
06. இரண்டாம் மொழி - சிங்களம் (2 NL) - பாடஇல. 407

நெறிப்பாடத்தில் மேற்கண்ட தொடர்புடைய பாடம் இருந்தால் பொதுப்பாடத்தில் அதனைக் கற்கத் தேவையில்லை.

எடுத்துக் காட்டாகத் தமிழ் நெறியில் கற்கும் ஒருவர் - பாட இல 402 இற்குரிய பொதுத் தமிழ் பாடத்தைக் கற்கத் தேவையில்லை. ஆரம்பக் கல்வி நெறியில் கற்கும் ஒருவர் மேற்கண்ட தமிழ், ஆங்கிலம், இரண்டாம் மொழி சிங்களம் ஆகிய பாடங்களைக் கற்கத் தேவையில்லை. ஏனெனில் இவை விரிவாக ஆரம்பக் கல்வியின் நெறிப்பாடங்களாகவும் அமைந்துள்ளன.

## 3) நெறிப்பாடங்கள்

**ஆரம்பக் கல்வி நெறிக்கு**

01. முதலாம் மொழி (தமிழ்) - பாட இல. 241
02. கணிதம் - பாட இல. 242
03. சுற்றாடல் சார் செயற்பாடுகள் (ERA) - பாட இல. 243
04. இந்து சமயம் அல்லது கிறிஸ்தவ சமயம் அல்லது இஸ்லாம் சமயம் (245{246{247)
05. ஆங்கிலம் - பாட இல. 248
06. இரண்டாம் மொழி சிங்களம் - பாட இல 249

(மொத்தம் 13 பாடங்கள் (தொழில்சார்-03, பொது-03, நெறி-06, கற்பித்தல் பயிற்சி-01)

**இரண்டாம் நிலை (Secondary) நெறிக்கு**

இவர்கள் இரண்டு பாடங்களைக் கற்பிக்கும் தகைமையைப் பெறுவர். (உதாரணமாக - கணித ஆசிரியர் கணிதபாடத்துடன் விஞ்ஞானம் கற்பிக்கும் தகைமை பெறுவர்) இந்த பாடங்கள் ஒவ்வொன்றும் இரண்டு அல்லது மூன்று கூறுகளைக்

கொண்டிருக்கலாம்

அ. பாடவிடயம்
ஆ. கற்பித்தல் முறையியல்
இ. செயன்முறை

## தமிழ்நெறி ஆயின்

தமிழ் 1 - பாட இல. 111
தமிழ் 2 (கற்பித்தல் முறையியல்)-பாடஇல. 112
வரலாறு 1 - பாட இல 141
வரலாறு 2 - பாட இல. 147

(மொத்தம் 13 பாடங்கள் (தொழில்சார் - 03, பொது - 05, நெறி - 04, கற்பித்தல் பயிற்சி - 01)

## இந்துசமய நெறி ஆயின்

இந்து சமயம் 1 - பாட இல. 201
இந்து சமயம் 2 (கற்பித்தல் முறையியல்) - பாடஇல. 202
தமிழ் 1 - பாட இல 116
தமிழ் 2 - (கற்பித்தல் முறையியல்) பாட இல. 117
(மொத்தம் 13 பாடங்கள் (தொழில்சார் - 03, பொது - 05, நெறி - 04, கற்பித்தல் பயிற்சி - 01)

## கிறிஸ்தவ சமயநெறி ஆயின்

கிறிஸ்தவ சமயம் 1 - பாட இல. 191
கிறிஸ்தவ சமயம் 2 (கற்பித்தல் முறையியல்) - பாடஇல. 192.
தமிழ் 1 - பாட இல 116
தமிழ் 2 - (கற்பித்தல் முறையியல்) பாட இல-117
(மொத்தம் 13 பாடங்கள் (தொழில்சார் - 03, பொது - 05, நெறி - 04, கற்பித்தல் பயிற்சி - 01)

## வணிக நெறி ஆயின்

வணிக நெறி 1 - பாட இல. 131
வணிக நெறி 2 (கற்பித்தல் முறையியல்) - பாட இல. 132
மின் ஆவணப்படுத்தல் 1 - பாட இல 133
மின் ஆவணப்படுத்தல் 2 - (கற்பித்தல் முறையியல்) பாட இல. 134
(மொத்தம் 14 பாடங்கள் (தொழில்சார் - 03, பொது - 06, நெறி - 04, கற்பித்தல் பயிற்சி - 01)

## சமூகக்கல்வி நெறி ஆயின்

சமூகக்கல்வி - பாட இல. 141
புவியியல் - பாடஇல. 142
குடியியில் கல்வி - பாடஇல. 143
கற்பித்தல் முறையியல் - பாட இல 144
(மொத்தம் 14 பாடங்கள் (தொழில்சார் - 03, பொது - 06, நெறி - 04, கற்பித்தல் பயிற்சி - 01)

## ஆங்கில நெறி ஆயின்

ஆங்கிலம் 1 (Linguistics ,Reading & Writing) பாட இல - 121.
ஆங்கிலம் 2 (ELT Methods) - பாடஇல-122.
ஆங்கிலம் 3 (Speech) - பிரயோகம் 123
ஆங்கில இலக்கியம் 1 - பாட இல 124
ஆங்கில இலக்கியம் 2 (Lit. Methods) - பாட இலக்கம் 125.
(மொத்தம் 14 பாடங்கள் (தொழில்சார் - 03, பொது - 05, நெறி - 05, கற்பித்தல் பயிற்சி - 01)

## விஞ்ஞான நெறி ஆயின்

விஞ்ஞானம் 1 - பாட இல. 11
விஞ்ஞானம் 2 (Teaching Methods) - பாடஇல. 12
விஞ்ஞானம் 3 (Practical) - 13
கணிதம் 1 - பாட இல 26
கணிதம் 2 (Teaching Methods) - பாட இலக்கம் 27

## கணித நெறி ஆயின்

கணிதம் 1 - பாட இல. 21
கணிதம் 2 (Teaching Methods) - பாடஇல. 22
விஞ்ஞானம் 1 - பாட இல 16
விஞ்ஞானம் 2 (Teaching Methods) - பாட இலக்கம் 17

## மனைப்பொருளியல் ஆயின்

மனைப்பொருளியல் 1 - பாட இல. 41
மனைப்பொருளியல் 2 (Teaching Methods)- பாட இல. 42
மனைப்பொருளியல் 3 (செயன்முறை) - பாட இல 43
தமிழ் 1 - பாட இல 116
தமிழ் 2 (Teaching Methods) - பாட இலக்கம் 117
(மொத்தம் 14 பாடங்கள் (தொழில்சார் - 03, பொது - 05, நெறி - 05, கற்பித்தல் பயிற்சி - 01)

## சங்கீதம் ஆயின்

சங்கீதம் 1 - பாட இல. 81
சங்கீதம் 2 (Teaching Methods) - பாடஇல. 82
சங்கீதம் 3 (செயன்முறை) - பாட இல 83
தமிழ் 1 - பாட இல 116
தமிழ் 2 (Teaching Methods)- பாட இலக்கம் 117
(மொத்தம் 14 பாடங்கள் (தொழில்சார் - 03, பொது - 05, நெறி - 05, கற்பித்தல் பயிற்சி - 01)

## உடற்கல்வி நெறி ஆயின்

உடற்கல்வி 1 - பாட இல. 151
உடற்கல்வி 2 (Teaching Methods) - பாடஇல. 152
உடற்கல்வி 3 (செயன்முறை) - பாட இல 153
குடியுரிமைக் கல்வி 1 - பாட இல 143

தொடர்ச்சி பக்-12




இ.கோகுலராகவன்,
அதிபர்
புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த ஆரம்பப் பாடசாலை.

“ஆரம்பக் கல்வி மாணவரின் அடிப்படை எழுத்தறி திறனை மேம்படுத்துவதன் வாயிலாக மாணவரின் கல்விசார் அடைவுமட்டத்தை மேம்படுத்த முடியும். இதனை வலியுறுத்தும் வகையிலான வெபினார் கலாசாலையால் ஒழுங்கமைக்கப்பட்டு கடந்த 09.12.2020 அன்று நடைபெற்றது. இதன்போது இது விடயத்தில் கூடிய கரிசனைகொண்டு செயற்பட்ட அதிபர் திரு. இ.கோகுலராகவன் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டதுடன் கலாதீபம் வாசகர்களுக்காக எழுத்து வடிவிலும் தந்துதவியுள்ளார். புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை என ஆரம்பத்தில் இருந்த பெயர் கல்வித் திணைக்களத்தால் சோமாஸ்கந்த ஆரம்பப் பாடசாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.”

2010 இல் நான் யா/ஸ்ரீ சோமஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலையில் அதிபராக பொறுப்பேற்ற சமயத்தில் பாடசாலையின் அடைவுமட்டம் துரதிஸ்ட வசமாக சாதகமான நிலையில் காணப்படவில்லை. அந்த வருடம் மூன்றாம் தவணைப் பரீட்சையில் 520 மாணவர்களில் 184 பேர் தமிழ் மொழியில் 35 புள்ளிகளுக்கு குறைவாகவே பெற்றிருந்தனர். அதே வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 104 மாணவர்களில் 40 பேர் 70 புள்ளிகளுக்கு குறைவாகவும் பெற்றிருந்தனர். இது

---

**ஆசிரிய கலாசாலைகளில்...**

குடியுரிமைக் கல்வி 2 (Teaching Methods) - பாட இலக்கம் 148.
(மொத்தம் 14 பாடங்கள் (தொழில்சார் - 03, பொது - 05, நெறி - 05, கற்பித்தல் பயிற்சி - 01)

## விசேட கல்வி ஆயின்

கலாசாலைகளுக்கு தற்போதைய ஆட்சேர்ப்பு முறைமையின் பிரகாரம் நியமனம் பாடம் எதுவோ அதற்குரிய பயிற்சிக்கே மாணவர்கள் அனுமதிக் கப்படுவர். ஆயினும் எந்தப் பாடத்திற்குரிய நியமனம் பெற்றாலும் அவர் விரும்பினால் விசேட கல்விப் பாடத்தைப் பயில முடியும் என்ற ஏற்பாடு தற்போது வர்த்தமானியின் ஊடாக தெரிவிக்கப் பட்டுள்ளது. விசேட கல்வி மாணவர்கள் பின்வரும் பாடங்களைப் பயில வேண்டும்.

விசேட கல்வி 1 - பாட இல. 161
விசேட கல்வி 2 (Teaching Methods) - பாடஇல. 162
சுற்றாடல்சார் செயற்பாடு - பாட இல 166
சுற்றாடல்சார் செயற்பாடு கற்பித்தல்முறை - பாட இல 167.

(மொத்தம் 14 பாடங்கள் (தொழில்சார் - 03, பொது - 06, நெறி - 04, கற்பித்தல் பயிற்சி - 01)

## பாடங்கள் தொடர்பான மதிப்பீடு

கணிப்பீடு (உள்ளகம்) - 40 புள்ளிகள்
பரீட்சைத் திணைக்களப் பரீட்சை - 60 புள்ளிகள்
பொதுப்பாடங்களுக்கான பரீட்சைகள்
கணிப்பீடு (உள்ளகம்) - 40 புள்ளிகள்
ஜேநு நடத்தும் பரீட்சை - 60 புள்ளிகள்

### தற்போது அனுமதி பெற்றவர்களின் கற்கை நெறிக்காலம்

15.12.2020 தொடக்கம் - 14.12.2022 வரை ஆகும். இயல்பாகக் கற்கைநெறி இடம்பெற்று பரீட்சையில் சித்தி பெற்றால் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி - 01.01.2023 என அமையும். நிறுவனத்தில் பதிவுசெய்த திகதியை அடுத்து வருகின்ற முதலாம் திகதியே சான்றிதழ் செல்லுபடியாகும் திகதியாகக் கொள்ளப்படும். அந்தத் திகதியில் இருந்து போதனாவியல் பயிற்சி பெற்ற SLTS – Class 3 I - (B) நியமனத்துக்கு உரித்தாக முடியும்.

பாடசாலையில் கல்வி நடவடிக்கையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதை மிக வெளிப் படையாகவே உணர்த்தியது.

மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவையை நாம், நன்கு உணர்ந்து கொண்டோம். இதற்கான அடிப்படைக் காரணம் பெரும்பாலான மாணவ ர்கள் எழுத, வாசிக்கும் ஆற்றல் அற்றவர்களாக இருப்பதே என்பது முக்கியமானது. இது உடன டியாக நிவர்த்தி செய்யக் கூடிய செயற்பாடாக அமைந்திருக்கவில்லை. எனவே அடுத்து வரும் மூன்று ஆண்டுகளை இதற்கான அடிப்படை மாற் றத்தை ஏற்படுத்தும் ஆண்டுகளாக கருதி எமது ஆசிரிய குழாம் செயற்படத் தொடங்கியது. இதற் கான செயற்பாடுகள் திட்டம் இடப்பட்டன. அவை யாவன


1) வாசிப்பு முகாம்கள் - வாரம் இருமுறை
2) சொல்வளம் - தினந்தோறும்
3) வாசிப்பு - தினசரி காலை 10 நிமிடம்
4) வாசித்த பின் மீண்டும் சொல்லல் - தினசரி
5) ஒலிபெருக்கியில் வாசிப்பு - தினசரி
6) எழுத்துப் பொறி பேணல் - நாள் முழுவதும்

இவை பிரதான தலைப்புக்களாக இருந்த போதிலும் உள்ளார்ந்த பல துணை நடவடிக்கை களை கொண்டவையாக இருந்தன. உதாரணமாக சொல்வளம் வைக்கப்படும் போது ஈரெழுத்துச் சொற்கள், மூவெழுத்துச் சொற்கள் என இலகு வான சொற்களே வழங்கப்பட்டன. அவ்வாறு வழங் கப்பட்ட சொற்கள் உடனடியாக சொல்வளத்தில் ஆசிரியர்களால் வைக்கப்படவில்லை. மாறாக அவை முதலாம் நாள் மாணவர்களுக்கு வழங்கப் பட்டன. அவர்கள் அச்சொற்களை வீட்டில் ஏனைய வர்களின் உதவியுடன் பல தடவை எழுதிப் பழகிய பின்னர் மறுநாள் பாடசாலையில் எழுதும் போது முன்னேற்றத்தை உணரத்தொடங்கினர். இது எமது அடிப்படை வெற்றிச் செயற்பாடாக அமைந்தது. இவ்வாறு ஒவ்வொரு செயற்பாடும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன. இவை வருடா வருடம் மெருகூட்டப்பட்டு செயற்படுத்தப் பட்டன.

2015 இல் ஐந்தாவது வருடம் எமது பெறுபேறு களில் மாற்றம் இந் நடவடிக்கைகளால் ஏற்படத் தொடங்கியது. 2015 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய 85 மாணவர்களில் 12 பேர் 70 புள்ளி களுக்குக் குறைவாகப் பெற்ற மாற்றத்தை காண முடிந்தது.

மேலும் ஐந்து வருடத்தின் பின் 2020 இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 98 மாணவர்களில் 2 பேர் மட்டும் 70 புள்ளிகளுக்கு குறைவாக பெற்றனர். இதற்கான காரணம் எமது ஆசிரிய ஆளணி மேற்சொல்லப்பட்ட செயற்பாடு களை இறுக்கமாகப் பின்பற்றியமையே ஆகும். இதே பரீட்சையில் 37 மாணவர்கள் வெட்டுப் புள்ளி களுக்கு மேல் பெற்று சித்தியடையவும் இதுவே பிரதான காரணமாகும்.

ஒரு கிராமப்புற பாடசாலையின் கல்வித் தரத்தை தக்கவைக்க இந்த ஆறு செயற்பாடுகளும் முக்கிய காரணிகளாக அமையும் என்பது நாம் கண்ட அனு பவ ரீதியான உண்மையாகும். இவற்றைக் கிரம மாகக் கைக்கொள்வதன் வாயிலாக மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என உறுதியாக நம்புகின்றோம்.



# பூநகரி ஓர் பழந்தமிழ் நகர்

பூகோளசார் அமைவில் இந்து சமுத்திரத்தின் இயற்கையாய் மிளிரும் இலங்கைத் தீவின் வட பிரதேசத்திலே உள்ள கிளிநொச்சி மாவட்டத்திலே வடக்கே யாழ்ப்பாணக் கடலேரியையும் தெற்கே வெள்ளாங்குளத்தினையும் மேற்கே வங்கக்கடலினையும் கிழக்கே குடமுறுட்டி ஆற்றினையும் கொண்டு வரலாற்றையும் பண்பாட்டையும் தனித்துவமாய் பேணிக் காத்துவருகின்ற தன்னகரே பூநகரி. பூநகரிப் பிரதேசத்தின் கடலன்னையும் நிலமகளும் இணைந்து வழங்கும் திரவியங்களே இப்பகுதிச் செல்வமெனின் மிகையாகாது.

கடல்படு திரவியங்களால் அது தொடர்பான தொழில் வகைகள் பல்கிப் பெருகியிருந்தன. அதேபோல் ஊர் உலகம் போற்றும் "பூநகரி அரிசி" இனங்களால் இல்லங்களில் இல்லாமை இல்லா தொழிந்திருந்தது. ஆவினங்களின் ஐஸ்வர்யங்கள் அகலக் கால் விரித்ததென்றே கூறலாம்.



செல்மினி செல்வராசா
ஆசிரிய மாணவி
ஆரம்பக்கல்வி 02
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

வரலாற்று நோக்கில் பூநகரி என்ற சொல்லாட்சியானது கால ஆட்சிகளில் 'புதுக்கி, பூனேரி, பூனகரி, பூனேரியன், பூநகர், பூனரின்' போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பெயர்கள் காலப்போக்கில் நடைமுறை வழக்கில் மாற்றமடைந்து இன்று "பூநகரி" என்றபெயருடன் விளங்குகின்றது.

பூநகரி என்பது நெல் பூக்கும் பூந்துணர் பருவத்தைக் குறிப்பதாகப் பாரம்பரியமான மூத்த விவசாய குடிமக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த நெல் பூக்கும் காலம்தான் இப்பிராந்திய மக்களின் வசந்த காலமாக இருந்திருக்கின்றது. ஆதிக்குடியிருப்புக் காலப்பகுதியில் பொன்னாவெளி பாற்பண்ணைக்கும், பல்லவராயன்கட்டு வேடுவத் தொழிலுக்கும், நெல்லுார் நெற்களஞ்சியமாகவும் திகழ்ந்துள்ளது.

கி.பி 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க நாட்டவரான தொலமி குறிப்பிட்ட 'புதுக்க' என்ற இடம் பூநகரியையும, தலைகோரி என்ற இடம்



நாகவழிபாட்டு சின்னங்கள்

பூநகரியிலுள்ள கல்முனையையும் குறிப்பிடுகின்றது என வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

1924 இல் கொட்றிங்கரன் என்பவரால் வெளியிடப்பட்ட இலங்கையில் ஆதிகால நாணயங்கள் பற்றிய நூலில் பூநகரியில் உரோம கால நாணயங்கள் கிடைத்ததாகக் குறிப்பிடுகின்றார். இவை அக்காலத்தில் இருந்த வியாபாரத் தொடர்புகளை எடுத்துக் காட்டுகின்றதெனலாம். கி.பி 3 ம் நூற்றாண்டில் இருந்து தமிழ் நாட்டிற்கும் அனுராத புரத்திற்கும் இடையிலான வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்புகள் யாழ்ப்பாணம் - பூநகரி ஊடாக நடைபெற்றதை உறுதிப்படுத்துகின்றது எனலாம்.


மேலும் பூநகரி வாடியடியில் காணப்படுகின்ற பூநகரிக் கோட்டையினை போர்த்துக்கீசர் தமது ஆட்சியின் கடைசிக் காலத்தை அண்டி நிறுவினர். அதன் தள அமைப்பு ஏறத்தாள சதுர வடிவானதாகவும் இதன் பக்கங்கள் 100 அடிநீளம் கொண்டனவாகவும் கோட்டையின் கிழக்கு, மேற்கு மூலைகளில் இரண்டு கொத்தளங்களும், வடக்குப் பக்கச்சுவரில் கோட்டையின் வாயிலும், இவ்வாயிலுக்கு அருகே உட்புறத்தில் காவலர் அறையும்,

பூநகரிக் கோட்டை



தெற்கு, மேற்கு சுவரை ஒட்டியபடி வரிசையாகப் போர் வீரர் தங்கும் அறையும், கிழக்குப்புறச் சுவரை அண்டி பல அறைகளைக் கொண்ட ஒரு கட்டிடமும் அமைக்கப்பட்டிருந்தது என ஒல்லாந்தர் கோட்டைகள் பற்றி ஆராய்ந்து நூல் எழுதிய நெல்சன் என்பவர் குறிப்பிடுகின்றமையை காண முடிகின்றது.

கண்டெடுக்கப்பட்ட இவ்விக்கிரகம் லக்சுமிக் குரியது என்பதனை அதன் அங்கஅடையாளங்கள் உறுதி செய்வதுடன். இவ்வாறான விக்கிரகங்கள் கி.பி 10 - 11 ஆம் நூற்றாண்டளவில் ஈழத்திலும் தமிழகத்திலும் பயன்பட்டிருக்கலாம் எனபலசான்று கள் கூறுகின்றன.



பூநகரியில் கண்டெடுக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள்

பூநகரியில் வரலாற்றுப் பழமைவாய்ந்த அரச புரம் எனும் இடம் தமிழ் பிராந்தியங்களில் புராதன நகரங்களில் வழிபாடுகள் காணப்படும் இடங்களில் ஒன்று என கூறப்படுகின்றது. அவ்வகையில் இடப் பெயர்வு காலத்திற்கு முன்னர் இவ்விடத்தில் ஒரு புராதனகட்டடம் இருந்ததற்கான கட்டட அத்தி வாரங்களும், சிதறுண்ட நிலையிலே செறிவான செங்கட்டிகளும் காணப்பட்டுள்ளன. இக் கட்டடத் திற்கு கிழக்கே அரசபுரக்குளம் காணப்படுகின்றது. பல வருடங்களுக்கு முன்னர் இக்கட்டிடங்களை இடித்து அதன் கற்களையும் செங்கட்டிகளையும் கொண்டு மாந்தையிலுள்ள சில ஆலயமும் கறுக்காய்த்தீவு அரியாலைப் பகுதியில் ஆலயங்களும் கட்டப்பட்டதாக அறியமுடிகின்றது. பூநகரியில் வாழும் மக்கள் இங்கிருந்த கட்டடத்தை அல்லிராணி வாழ்ந்த அந்தப்புரம் எனக் கூறிக் கொள்கின்றார்கள். இந்த மரபு வழியிலே அந்தப்



நாகவழிபாட்டு சின்னங்கள்

புரம் அரசபுரமாக அழைக்கப்படுகின்றது என கருதப்படுகின்றது.

இவ்வாறாக அரசபுரத்திற்கு அண்மையில் ஆல டிச்சோலை எனும் காட்டுப்பகுதியில் பொன்முலாம் பூசப்பட்டு கருங்கல்லில் புடைப்புச் சிற்பத்திலே யான விநாயகர் கண்டெடுக்கப்பட்டதுடன் ஈழத் தமிழர் கலை வரலாற்றை பறைசாற்றி நிற்கின்ற சூரிய சிற்பமானது பல்லவராயன்கட்டு எனும் இடத் திலும் கண்டெடுக்கப்பட்டது.

இவ்வாறாக அகழ்வாராட்சிகளின் போது கண் டெடுக்கப்பட்ட சான்றுகளினை வைத்து நோக்கு கின்றபோது 'பூநகரி ஓர் பழந்தமிழ் நகர்' எனக் கூறுவதில் எவ்வித ஐயமுமில்லை.

**உசாத்துணை நூல்கள்**


1. தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண் டையகால மதமும் கலையும் - கலாநிதி பரமு புஸ்பரட்ணம்.

2. தமிழ் எழுத்தின் தோற்றம் - கலாநிதி பரமு புஸ்பரட்ணம்.

3. பூந்துணர் - காலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், பூநகரி.



மண்ணித்தலை சிவன் ஆலயம்



# காலம் கடந்த ஏக்கங்கள்...!

## சிறுகதை

இ.இளங்கீரன்
ஆசிரிய மாணவன்
ஆரம்பக்கல்வி - 3
2019/2020

அன்றும் வழமையான காலைப் பொழுதுதான் ஆனால் வழமைக்கு மாறாக வெறிச்சோடி கிடந்தது நிவேயின் மனம். நீண்ட அமைதியின் நிசப்தத்தை கிழித்து வெளிவந்த பெருமூச்சுடன் சுற்று முற்றும் பார்த்தாள் மனம் மட்டுமல்ல வெறிச்சோடி கிடந்தது வீடும்தான். கண்ணீர்த் துளிகள் அடிக்கடி கன்னத்தில் சூடு வைப்பதை கட்டுப்படுத்த முடியவில்லை. வழக்கமான கோபங்கள் கடும் வார்த்தைகள் எல்லாம் வடித்துபோட்டது போல் இருந்தது. அவள் உள்ளம் அறிந்த நிவேயின் கணவன் தலை கோதி சற்று ஆதரவாய் சாய்ந்துகொள்ள தோள் கொடுத்தான். இதைக்கேட்டதும், புதிதாகத் திருமண மானவர்கள் என்று நீங்கள் நினைக்கலாம். ஆம் புதிதாக திருமண மானவர்கள்தான் ஆனால் அது நிவேயின் கடைக் குட்டி மகள். ஏற்கனவே ஒரு மகள் திருமணமாகி போயிருந்தாள். மகனும் திருமணமாகி வேலை நிமித்தம் தனிக்குடித்தனம் போயிருந்தான். அம்மா அப்பா என மூன்று பிள்ளைகளைக் கொண்டது நிவேயின் குடும்பம். யார் உதவியும் கிடைக்காமல் பற்பல தியாகங்கள் செய்து பசி, தூக்கம் தள்ளி வைத்து குழந்தைகளை வளர்த்தாள். காலையில் சமைத்துவிட்டுப் பிள்ளைகளை ஆயத்தம் செய்து கணவனுடன் புறப்பட்டு பிள்ளைகளை பாடசாலைகளில் விட்டு கணவன் ஒரு பக்கம் வேலைக்குச் செல்ல தானும் ஒரு பக்கம் ஓடியோடி வேலைக்குச் செல்ல வேண்டி இருந்தது. இப்படியே வேலைப் பழுவிற்கும் பரபரப்பிற்கும் எப்போதும் குறைச்சல் இல்லாமல் பொழுதுகள் கழிந்தது.



காலையில் எழுந்த உடனே கரண்டிகள், பாத்திரங்கள் நிவேயின் கோபத்திற்கு நாதம் இசைக்கும். கணவனுக்கு தேநீர் குடுக்கும்போது, எல்லாம் நான் ஒருத்திதானோ செய்தாகவேணும், அதை செய்துதந்தால் என்ன? இதை செய்துதந்தால் என்ன? என்ற புலம்பல்களுக்கு எப்போதும் குறைவிருக்காது. கண்ணனும் அன்பான கணவன் தான். இருந்தாலும் ஏனோ தெரியவில்லை வீட்டு வேலைகளில் ஈடுபாடு இருக்கவில்லை. வெளிவேலைகள், கஷ்டமான வேலைகள், எதையாவது பழுது பார்ப்பது என்றால் ஆர்வமுடன் செய்பவனுக்குப் பால் சூடாக்குவதும், வெங்காயம் நறுக்குவதும் கடினமாகத் தெரிந்தது. நிவேயின் நச்சரிப்புத் தாங்கமுடியாமல் சில நாட்கள் செய்து கொடுத்தாலும் பல வேளைகளில் ஒதுங்கிவிடுவதே வழக்கம்.

பாதி சமையலில் இருந்து ஓடிவந்து பிள்ளைகளைத் தட்டி எழுப்பிவிட்டு மறுபடியும் ஓடுவாள். தனக்கும் கணவனுக்குமான மதிய சாப்பாட்டை பார்சல் செய்து வைத்துவிட்டு மறுபடியும் பிள்ளைகளிடத்து போனால் அவர்கள் தங்களை மறந்து தூங்கிக் கொண்டிருப்பார்கள். அவ்வளவு தான், கட்டுச்சொல்லும் காளிபோல் மாறிவிடுவாள். சத்தம் மட்டுமென்ன


விடிகாலையிலேயே தலகணியோ எதுவோ கிடப் பதைக்கொண்டு அடி விழக்கூடத் தவறுவதில்லை. அவர்களுக்கும் பழகிவிட்டிருந்தது, யாருக்கு அடி விழவில்லையோ அவர் பெருமைக்குரியவராக மற் றவர்களைக் கேலி செய்வதும் நடக்கும். சொந்தங் களுக்கும் தன் நண்பர்களும், பிள்ளைகளுக்கு தேவைப்பட்ட எல்லாமே தான் கொடுப்பதும், அவர் களுக்கு தனித்தனியாக பணம் சேமிப்பு செய்வது பற்றியும், நல்ல பாடசாலையில் கல்வி, நல்ல உடுப் புக்கள் என்று தேவைப்பட்டதெல்லாம் கிடைப்பதை யும் அவர்களுக்குச் சொல்லிச்சொல்லிப் பெருமை பட்டுக் கொள்வாள்.

அதுமட்டுமல்ல மற்றவர்களுக்கு அறிவுரை கூடச் சொல்லுவாள். ரி.வி.யில் தொடர்நாடகம் பாக்கிறார் களே உங்கள் பிள்ளைகள் இதுக்கு பதில் டிஸ்க வரி சானலை பாக்கச்சொல்லிச் சொல்லலாமே? என் பிள்ளைகளையெல்லாம் நான் பாட்டுக்குகெல் லாம் ஆடவிடமாட்டேன், பள்ளி முடிந்துவந்து இப் பிடி அங்கொன்றும் இங்கொன்றும் புத்தகவாக், சப்பாத்து, சொக்ஸ் என சிதறி போடுகிறார்களே இது கூடாதபழக்கம் நான் அனுமதிப்பதில்லை. அதையதை அங்கங்கே வைத்தேயாகவேணும் எனக்கு என்பாள்.

இப்படியே குழந்தைகள் வளரவளர நிவேயின் கோபத்தின் வெளிப்பாடுகள் மாறியதே தவிர கோபம் மட்டும் மாறவில்லை. எப்போதும் கடுமையாகவே நடந்துகொண்டாள். பிள்ளைகள் விளையாடினால் போயிருந்து படி என்பதும், ஆடிப்பாடினால் மாக்ஸ் வாங்கிய திறத்தில் என்ன ஆட்டம்பாட்டம் என்ப தும், சற்றேனும் முகப்பூச்சுக்கள் வாய்ப்பூச்சுக்கள் பூசி அலங்கரித்துக் கொண்டால் இது தேவையா? கூடாது இதெல்லாம் வேண்டாம் என்பதும், வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க கடுமையான சட்டங்கள் வைப்பதும், ஓயாமல் புத்திமதி சொல்வதுமாய் நிவே யின் செயல்பாடுகள் இருக்க, காலம் மட்டும் மிக வேகமாய் உருண்டுகொண்டிருந்தது. பிள்ளைக ளும் திருமண வயதை எட்டியது மட்டுமல்ல ஒவ் வொருவராகத் திருமணமாகி கூட்டைவிட்டுப் பறந் தனர்.

அதேமாதிரி இன்று கடைசி மகளும் திருமண மாகிச் செல்ல, ஆசிரிய பணியில் இருந்தும் ஓய்வு கிடைக்க வாழ்க்கையை முதன் முறையாய் நின்று நிதானித்துத் திரும்பிப் பார்த்தவளுக்கு எல்லாம் கடந்து போய்விட்டிருந்தது. அந்நேரம் எங்கோ குழந்தை அழும் சத்தம்கேட்டது. இதுவே என் குழந் தையாக இருக்கக்கூடாதா என்று வாய்விட்டு சொன் னாள் நிவே. ஏன் திடீரென இந்த மாதிரி பேசுகிறாய் என்ற கணவனுக்கு, ஆம் என் மூர்க்க குணங்க ளைத் து க்கியெறிந்துவிட்டு, அன்பாய், ஆதரவாய் செய்யும் தியாகங்களை இரசித்துக் குழந்தைக ளுக்கு எல்லாவற்றிலும் கட்டுப்பாடுகள் விதிக்கா மல் அரவணைத்து அனுபவித்து வாழ ஆசைப்படு கிறேன் என்றாள்.

அதற்கு நிவேயின் கணவன், ஏன் கவலைப்படு கிறாய் நம்மட மூத்தவளின் செல்லத்தை அடிக்கடி கூட்டிவந்து பார்த்துக்கொள்ளலாமே. நாம் என்ன து ரத்திலயா செய்து கொடுத்திருக்கிறோம் கவ லையைவிடு என்றபோது, நிவே உடைந்துபோய் சத்தமாக அழுதுகொண்டே சொன்னாள், கடந்த தடவை போனபோது நான் பிள்ளையி டம் கேட்டேன் குழந்தையைக் கூட்டிப் போகி றேன் என்று அவள் மறு த்து விட் டாள்.




இல்லை அம்மா நீங்கள் ஓய்வெடுத் துக்கொள் ளுங்கள் எங்க ளோடு பட்ட பாடேபோதும். எனக்கு என் குழந்தை களால் எந்த கஸ்டமும் கிடை யாது, அவர்கள் செய்யும் ஒவ்வொரு

செயலையும் நான் இரசிக்கிறேன் என்றாள். நிர்ப் பந்தங்களும், கட்டுப்பாடுகளையும் அவர்கள் மேல் திணிக்க விரும்பவில்லை, அவர்கள் வீட்டைக் கலைத்துப் போட்டால் அவர்களுடன் சேர்ந்தே சுத்தம் செய்துவிடுவேன். நான் அவர்களுக்காகச் செய்யும் தியாகங்கள், வேலைகளைச் சுமையாக எண்ணவில்லை. எனக்கு அது சுகமாய் இருக்கிறது அம்மா. சுடு சொற்களை அவர்கள் மீது வீசி பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொடுக்க விரும்பவில்லை. நீ இங்கு வருமுன் நானும் பிள்ளைகளும் போனில் கேம் விளையாடிக்கொண்டிருந்தோம், அது உன க்கு பிடிக்காதே என்று நிறுத்தி அதை படுக்கை யறையில் சார்ச் ஏறுவதற்குப் போட்டுவிட்டோம். பிள்ளைகளுக்காக எங்களையும், வீட்டையும் மாற்றி வைத்திருக்கிறோம். எங்கள் வசதிக்கு அவர்களை வளைக்க விரும்பவில்லையம்மா. நாளை அவர் கள் இந்த வீட்டைவிட்டுத் தனி வாழ்க்கைக்குச் போகும்போது இந்த வீட்டில் கடந்துபோன ஒவ் வொரு நினைவுகளும் அவர்களைச் சந்தோசப் படுத்த வேணுமென்று நினைக்கிறேன் அம்மா என்றாள்.

பணம், வசதி, வாய்ப்பு, பேரறிவு, புகழ், எல்லா வற்றையும் வைத்து அவர்கள் உயர்வையும் மகி ழ்ச்சியையும் சம்பாதிப்பதை விட அன்பையும், மகிழ்ச்சியையும், ஆதரவையும் வைத்து அவர்கள் உயர்ச்சியை எதிர்கொள்ளக் கற்றுக்கொடுக்கிறேன். இல்லையில்லை உதாரணமாய் வாழ்ந்து காட்டு கிறேனம்மா என்று மகள் தனக்குச் சொன்னதைச் கணவனிடம் சொல்லிமுடித்தாள் நிவே.

எனக்கு என் பிள்ளைகள் குழந்தைகளாக வேண் டும். நான் அவர்கள் என்ன செய்தாலும் அன்பால் அரவணைத்து கலகலப்பாக வாழவேண்டும் என் றாள். காலம் கடந்துவிட்டதை மறந்தவளாய். ஆம் பிள்ளைகள் மேல் நாம் எவ்வளவு உயிராக இருந் தாலும் அவர்கள் நம் வீட்டின் நீண்டகால விருந் தாளிகள் எப்போதுமே எங்கள் பிள்ளைகள் தான். இருந்தாலும் நாளை எங்கள் வீட்டுக்கு வந்தால் வீட்டை கலைத்துப் போட்டு ஓடியாடி குழறுபடி செய்யமாட்டார்கள். நீங்கள் கண்ணயரும் போது கண்ணைத் திறந்து பார்த்தோ, காதுக்குள் விரல் விட்டு குடையவோ, மூக்கினிலே உள்ள முடி யைப் பிடுங்கவோ மாட்டார்கள். அவர்களுக்குக் இப்ப குறும்புக் காலம், கவலைகள் வேர்விடாத காலம், சுமைகள் தோள்மீது ஏறாதகாலம், எங்கள் வீட்டில் எங்களோடு இருக்கும் அந்த சொற்ப காலம் மட்டுமே பொற்காலம் என்பதை மறக்க கூடாது. முடிந்தளவு யாவரையும் அன்பால் வழி நடத்துவோம். அன்பால் நிறைவேற்ற முடியாதது எதுவுமேயில்லை. ○○○






எண்ணமே வாழ்வு நாம் வாழும் வாழ்க்கையில் எதை நினைக்கிறோமோ அதுவே வாழ்வாக மலர்கிறது. அந்த எண்ணமானது எல்லோருடைய மனங்களிலும் நல்லெண்ணமாக எப்போதும் மலர்வதில்லை. அதனை நாம் கண்கூடாக எங்குமே காணமுடிகிறது. எண்ணமானது எல்லோருடைய சூழ்நிலை, வாழ்விடம், வசதி, குடும்பம் என்பதைப் பொறுத்தே அவை நல்லனவாகவும், தீயனவாகவும் உருவாகின்றன. காரணங்கள் எதுவாக இருந்தாலும் எல்லோரும் நல்ல எண்ணங்களையே எம் சிந்தனைகளாக உருவாக பழகிக்கொள்ள வேண்டும்.

அந்த நல்லெண்ணங்களை கற்றுக்கொடுக்கும் மிகப் பிரதான கூடமாகப் பாடசாலைகளே விளங்குகின்றன. அந்தப் பாடசாலையைக் குறிக்கும் School என்னும் ஆங்கிலச் சொல் வெறு மனே வார்த்தையல்ல. அதில் ஒரு கருத் தாழமே நிறைந்திருக்கிறது. அந்த சொல்லின் ஒவ்வொரு எழுத்தும் ஒவ் வொரு அர்த்தத்தைத் தருகிறது.

S -sincerity - நேர்மை

C – capacity - திறமை

H – honesty - உண்மை

O -obedience - மரியாதை

O - oderliness - ஒழுக்கம்

L -learning - கல்வியறிவு

அத்தகைய பண்பை விளக்கும் பாடசாலைதான் நல்லொழுக்க சமுதாயத்திற்கு வித்திடுகிறது. அங்குதான் நல்வாழ்வியல் முறைகள் கற்றுக்கொள்ளப்படுகிறது. அன்பு, உண்மை, ஒழுக்கம், மரியாதை, விடாமுயற்சி, தன்னம்பிக்கை,

தேவராசா விஜிதா
ஆசிரிய மாணவி
2020-2021 அணி
ஆரம்பக்கல்வி
(ஆங்கிலம்)



விட்டுக்கொடுப்பு, சமத்துவம், சகிப்புத்தன்மைகள், ஒன்றுகூடல், பகிர்ந்துண்ணல், கல்வியறிவு, திறமை போன்ற நல்லெண்ணங்களை கற்றுக் கொடுப்பதனூடாக வன்முறையற்ற நல்வாழ்வியல் சமுதாயம் உருவாகிறது. அப்படி ஒரு சமுதாயம் உருவாக வேண்டுமெனில் நல்லாசிரியர்களின் வழிகாட்டலும்,



கற்பித்தலும் இன்றியமையாத ஒன்றாகவே காணப் படுகிறது. ஆசிரியர்கள் எப்போதும் மாணவர்கள் மனநிலையில் இருந்து எதையும் உணர்ந்து செயற் பட்டால் நல்லெண்ணமுள்ள நற்சமுதாயம் ஒன்றை உருவாக்க முடியும்.

நற்சமுதாயத்தை உருவாக்கும் மிகப் பிரதான இடமாக விளங்குவது பாடசாலைகள் என்றால் மிகையாகாது. அங்குகற்கப்படும் கல்வியே நல்ல சிந்தனைகள் உருவாக ஊன்றுகோலாக இருக் கின்றது. அந்த வகையில் அன்பு என்பது எல்லோ ருக்கும் பொதுவானது. “எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருங்கள்” அத்தகைய அன்புதான் எதை யும் கட்டியாளும் வல்லமை பெற்றது. உண்மை பேசுதல் மிகப் பிரதானமானது. “உண்மையே உயர்வுதரும்” நேர்மை என்பது தீயவழியில் செல் லாது நேர்மையாக வாழவும், ஒழுக்கம் என்பது “ஒழுக்கம் விழுப்பந்தரலான் அது உயிரிலும் ஓம் பப்படும்” ஒழுக்கம் சிறப்பைத் தருவதால் உயிரி னும் மேலானதாக மதிக்கப்படவேண்டும். மரி யாதை என்பது எல்லா மனிதர்களும் மரியாதைக் குரியவர்களே என்பதையும், விடாமுயற்சி என்பது எதையும் துணிந்து செயற்படும் திறனுடையதாக “தோல்வியே வெற்றியின் முதற்படி” தோல்வியை கண்டு துவளாமல் விடாமுயற்சியால் தான் வெற்றி யைத் தேடிப்பெற முடியும்.

தன்னம்பிக்கை என்பது தன்னை முதலில் முழுமையாக நம்புதல் என்னால் எதையும் செய்ய முடியும். என தன்னை நம்பி எதையும் செய்யவேண்டும். விட்டுக்கொடுப்பு என் பது ஒருவருக்கொருவர் பரஸ்பர புரிந் துணர்வுடன் விட்டுக்கொடுத்து வாழவேண்டும்.

சமத்துவம் என்பது எல்லா மனிதர்களையும் ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன், நோயாளி, சுகதேகி என இன, மத பாகுபாடின்றி சமமாக மதித்தலாகும். சகிப்புத் தன்மை என்பது நிலமானது தன்னை அகழ்வாரை தாங்குவது போல கோபம், துக்கம், வெறுப்பு தோன்றும் போது அதனை சகித்து மனதை சமநிலையில் வைத்து எந்த செயலையும் செய்தலாகும். ஒன்று கூடல் என்பது எந்தவொரு நிகழ்விலும் தவறாது கலந்துகொள்ளும் பண்பாகும். பகிர்ந்துண்ணல் என்பது “யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைபிடி” என்னும் அன்பான பகுத்தறிவற்ற உயிரக ளையும் மதித்து உணவளித்தல் பண்பை வளர்க் கிறது. இவை எல்லாவற்றுடனும் கல்வியறிவை பெறுவதனூடாகவே பல ஏனைய திறமைகளை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ளமுடியும். அத் தகைய கல்வியறிவை கற்பித்தலானது,

“அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்”

என கற்பித்தலின் சிறப்பை பாரதியார் இப் பாடலில் எடுத்துக் கூறியுள்ளார். அத்தகைய கல்வி யினை நல்லாசிரியர்கள் கற்பித்தலூடாகவே நல் லெண்ண சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும். நல்லெண்ண, நற்சமுதாய, நற் திறமைகளை வளர்க்க பாடசாலைகளே என்றும் தனித்துவமாக விளங்குகின் றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த நல் லெண்ணங்களை சிந்தனைகளாக்கி நாளைய உலகிற்கு நல்வழிகாட்டிகளை உருவாக்க எல்லோரது எண்ணங்களும் நல்லெண் ணங்களா உருவாக்குதலே சாலச் சிறந்தது.



# அண்மையில் நாம் அனுட்டித்த பாலன் பிறப்பு பெருவிழா





வீ.கருணலிங்கம்,
அதிபர்
கோப்பாய் ஆசிரியகலாசாலை

பாலகனாகப் பிறந்த யேசுகிறிஸ்து, வழிகாட்டிய விண்மீன்! "இதோ" கன்னி கருத்தாங்கி ஒரு மகனைப் பெறுவார். அவர் இம் மானுவேல் என்னும் பெயர் பெறுவார். அவர் மேன்மை மிக்கவராய் இருப்பார்." என்பது இறைவாக்கினர் எசாயாவின் தீர்க்க தரிசனம். அது நிறைவேறும்படி 2020 ஆண்டுகளுக்கு முன்பு பெத்தலஹேமில் தாவீதின் குலத்தைச் சேர்ந்த சூசை என்பவருக்கு மண ஒப்பந்தமான கன்னி மரியாளுக்கும் மகனாகப் பிறந்தார் இயேசு கிறிஸ்து.

அப்போது வானத்தில் புதியதொரு விண்மீன் எழுந்தது. அந்த விண்மீனைப் பின் தொடர்ந்து ஞானிகளும் அவரை ஆராதிக்க வந்தனர். பாவத்தால் துன்பப்பட்ட மனுக்குலத்தை மீட்க ஏழையாக அவதரித்த இயேசுவின் பிறப்புச் செய்தி முதன் முதலில் இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அப்போது வானதூதர்கள், இடையர்கள் முன் தோன்றி "அஞ்சாதீர்கள்! இதோ மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று தாவீதின் ஊரில் உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா! குழந்தையை துணிகளில் சுற்றி முன்னட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்" என்று சொன்னார்கள்.



அந்தச் சூழலில் உன்னதங்களிலே இறைவனுக்கு அதிமகிமை உண்டாகுக! பூவுலகில் நல் மனத்தோருக்கு அமைதியும் ஆகுக! உம்மைப் புகழ்கின்றோம், உம்மை வாழ்த்துகின்றோம். என்று பாட வானத்தில் விண்மின்கள் ஒளிர்ந்தன. யேசு கிறிஸ்துவின் பிறப்பின் முதல் அடையாளமாக இருந்த வால் நட்சத்திரம். அது பெத்தலஹேமின் விண்மீன் என்றும், ஆண்டவரின் வின்மீன் என்றும் சொல்லப்பட்டது. இயேசு பிறப்பதற்கு முன்பே முன் அடையாளமாக இந்த நட்சத்திரம் வானத்தில் தோன்றியதாம்.

கிறிஸ்து யேசுவை வரவேற்கும் விதமாகவும், கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் அழைப்பு மணியாகவும், மகிழ்ச்சியின் அடையாளமாகவும் விளங்கும் இந்த வால் நட்சத்திரத்தை விண்வெளி வியாழன் என்றும் சொல்வார்கள். இதன் மூலமாக தேவன் மனிதனாக அவதரித்திருக்கிறார். என்ற செய்தியை வசதி படைத்தவர்களைத் தேடிச் செல்லாமல் மந்தை மேய்ப்பவர்களிடம் சென்று சொன்னார்கள் இந்த அறிவிப்பைக் கேட்டதும் மேய்ப்பர்கள் ஆர்வத்துடன் யேசுவைச் காணச் சென்றார்கள். பலருக்கும் ஆச்சரியம்.

எனவே இயேசு கிறிஸ்துவின் பிறப்பு சிந்திக்கக் கூடியதொன்றாகும். பாவிகளை மீட்கவே பாலன் யேசு ஏழையாக பாரில் அவதரித்தார் என்ற உண்மையை உலகம் உணரவேண்டும். இறைவன் மனுக்குலத்தை மீட்க மனித அவதாரம் எடுத்து விண்ணகத்தைவிட்டு மண்ணகத்தை நோக்கி வந்தநாளே கிறிஸ்மஸ் தினமாகும். யேசு கொண்டுவந்த அன்பையும், சமாதானத்தையும் உங்களோடு பகிர்ந்து

கொள்ள விரும்புகின்றேன். Covid -19 இன் தாக்கத் தால் 2020 ஆம் ஆண்டில் கிறிஸ்மஸ் எனும் பாலன் பிறப்புவிழாவை கொண்டாட முடியாத இச் சந்தர்ப்பத்தில் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா நல்வாழ்த்துக்கள.

பாலன் இயேசு கொண்டுவந்த அன்பும், அமை தியும், சமாதானமும், உங்கள் இல்லங்களிலும் உள்ளங்களிலும் நிறைவாக இருப்பதாக! மலர இருக்கும் புத்தாண்டு ஒவ்வொருவரின் வாழ்விலும் புதிய உற்சாகத்தையும் புதிய வாய்ப்புக்களையும் புதிய வளங்களையும் வாரி வழங்கும் புதிய ஆண் டாக அமைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கொரோனா எனும் வைரசின் தாக் கம் அழிவுற்று மனிதகுலம் நிம்மதியாகவும் ஆரோக் கியத்துடன் வாழபாலன் யேசுவின் பிறப்பைப் போற்றுவோமாக!

# இயேசுபிரான்

மண்ணில் வந்தொரு மாதேவன்
மானுடர்க்காயவதரித்ததுண்டோ
கொடுந் துயர்தானடைந்து பஞ்ச
காயங்கள் கண்டதுண்டோ
பாவிகள் வினையகற்றி தீய
பாதகம் தீர்த்ததுண்டோ
கோரக் குருசினிலே குவலயந்
தன்னில் மாண்டதுண்டோ
மரித்து மூவொரு நாள்பட்டு
உயிர்த்ததுண்டோ
மானுடம் தளைத் தோங்க மறை
நூலுரைத்ததுண்டோ
மானிடர் நடுவில் மனிதனாயுதித்து
மாண்புறு வானகத்தை தந்திடவாய்
மொழிந்த மன்னவன்
இயேசுபிரான் அன்றில்
வேறொருவர் இப் புவியில்
அறிந்திலர் காணீர்.



கரவை செ.றமேஸ்
(ஆசிரிய மாணவன்)
ஆரம்பக்கல்வி–2
(2019/2020)

# புதியதோர் உலகம் சமைப்போம்

கடல் சூழ் இலங்கையின்
எழில் மிகு வட மங்கையின்
வளம்பெறும் யாழ் மடியின்
வலுப்பெறும் கோப்பாய் கலாசாலையில்
மறுபடி மாணவராய் நாம் பிறப்போம்
வாரீர் தோழர்களே! புதியதோர் உலகம் சமைப்போம்.

சேவலின் முன்பே நாம் எழுவோம்
சேவைகள் செய்யத் தயாராவோம்
காலையின் அழகை கண்டு களிப்போம்
கலைகளை வளர்த்து கண்ணியம் காப்போம்
ஆலம் விழுதின் வினைதிறன் போலவே
அகலித்த மனங்கொண்ட சமூகம் செய்வோம்
பழமையின் பெருமை புதியதில் காண்போம்
புதியதின் படைப்பை வளம்பெறக் கற்போம்
வாரீர் தோழர்களே! புதியதோர் உலகம் சமைப்போம்.

பூக்கும் மனக் கொள்கையால் போற்று வளங்காண்போம்
நீக்கமற நிறைந்த கல்விச்சாலை சென்று பயில்வோம்
கல்விச் செல்வம் செறிந்த கனிமரமாம் – இங்கே
சொல்லு தமிழ் ஆங்கிலமும் சிங்களமும்
சுவை படைத்த அந்நாளில் அருங்கலையும் கற்று
அவை போற்ற வாழ நயந்து பயின்று உரமிட
ஆசிரிய மாணவர் நாம் நாளை சொற்பிரயை ஆவோம்
வாரீர் தோழர்களே! புதியதோர் உலகம் சமைப்போம்.

திக்கெல்லாம் புகழ்பரவ தெய்வம் துணை நிற்க
மக்கள் நா வாழ்த்த மாநிலமும் சிறக்க – எம் கல்லூரி
முதல்வரொடு பேராசிரியர் யாவரும் புடைசூழ ஆசி பகர
சிறப்புடன் எதிர்காலத்தை சீருடன் கட்டி எழுப்ப
வாரீர் தோழர்களே! புதியதோர் உலகம் சமைப்போம்.



கஜேந்திரன் அஞ்சலா
ஆரம்பக் கல்வி B
2020 / 2021
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

# வியப்பில்லை

அன்று தென்னந் தட்டி பின்னி
சின்னஞ் சிறு கொட்டில் கட்டி
பென்னம்பெரிய குடும்பமாய்
அன்னமிட வாழையிலை பரப்பி
ஒன்றாய் அமர்ந்து உண்டோம்
நன்றாய் நலமாய் வாழ்ந்தோம்.

மண்சட்டி பானையில் சமைத்து
எண்சாண் உடல் மறைக்க
வண்ணமில்லா வேட்டி சட்டையும்
கைவண்ணத்தில் வடிவமைத்து கட்டினோம்
தை வந்தால் கொண்டாட்டமும்
தலைத் தீபாவளி திருநாளும்
கலைபண்பாடும் அணிவகுத்து நின்றன.

ஓராயிரம் துன்பம் வந்தாலும்
ஊர்கூடித் தேர் இழுத்து
ஊர்வலம் வந்தது உறவுக்குப் பாலம் அமைத்தோம்
அயல் வீட்டு இன்ப துன்பத்தை
அனைவரும் தம் வீட்டு நிகழ்வு போல் நற்பணி
செய்து மகிழ்ந்தோம்.

கட்டை வண்டில் பயணமும்
நட்டமரம் அனைத்திற்கும்– நல்ல
இயற்கை உரமுமிட்டு
இதயத்திற்கு இதமாய்
தூய காற்றை சுவாசித்தோம்
சமயச் சடங்குகளை சான்றோரின் சொற்படி
சந்தோசமாக செய்து வந்தோம்
போத்தலில் குளிர் தண்ணீர்
கேத்தலில் சுடு தண்ணீர்
அத்தனையும் காசு
தூசு இல்லாக் காற்றுக்கூட
போத்தலில் வந்தால் வியப்பில்லை

கட்டிடத்துக்கு மேல் கட்டியும்
குடியிருக்க ஓர் இடமுமின்றி
கோடிப்பேர் நடுத்தெருவில் நிற்கின்றனர் – ஆனாலும்
நொடிப்பொழுதில் கோடிப்பணம்
சம்பாதிக்கிறார் பூமித்தாயை விற்று
கடலிலே இடம்பிடித்து
நடுத்துண்டு என்றால் பரப்பு
நாலு கோடி என்று விற்றாலும் வியப்பில்லை
நிலவில் சுட்ட சுத்தமான வடை வாங்க
நிலத்தில் இருந்து விலையில்லா விமானம்
விட்டாலும் வியப்பில்லை.
கையடக்கத் தொலைபேசிக்கு மீள்
நிரவல் செய்கின்றோம்
கண்ணுக்குத் தெரியாமல் காசு வருகிறது
கதைக்கின்றோம் மணிக்கணக்கில்
மின்சாரத்தின் சக்தியை சுமக்கின்றோம்
சேமிக்கும் இயந்திரத்தில் – இன்று
ரூபாய் நூறுக்கு மீள்சக்தி செய்யும் முறை
வந்தாலும் வியப்பில்லை.



S.யோன்சன்
ஆசிரிய மாணவன்
2 ஆம் வருடம்
(2019/2020)
ஆங்கிலப் பிரிவு.

# விபத்தழி படலம்...!

அவசர உலகிற்குப் பெரும் வரம் என்று
ஆர்ப்பாட்டம் பலதந்து வந்து சேர்ந்தன...
இரும்புக் குதிரைகளும்
இயந்திரப் பறவைகளும்..
உயிர்கள் கருகிய பின்னே
புரிந்தன அவற்றின் கபடங்கள்..

கபடங்கள் புரிந்தாலும் உடலங்கள் வீழ்ந்தாலும்..
விடலைகள் தெரியாமல் சுடலைக்கு வழி தேடுவது..
இன்னும் தொடர்வது நெஞ்சுமிகு பாரங்கள்..
பஞ்சுமெத்தை மீதமர்வோரே
மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம் அறிவீரோ?
பட்டாலும் கெட்டாலும் விபத்தழி படலங்கள்..
தலைக்கேறா திருப்பது என்னகேடு?
அபத்தமா அறியாமையா நெஞ்சே நீ கூறு.
குதர்க்கமோ குதூகலமோ என்ன என்று நீ பேசு.

வேகம் உயிர் எடுக்கும். தேகம் தனை உடைக்கும்..
தலைக் கவசம் எம் உயிர்க் கவசம்..
கண்களுக்குத் தெரியும் இந்த விம்பங்கள்..
புத்தியில் ஏறாதோ காளையரே.. காரிகையரே..?

சொகுசுப் பஞ்சில் குந்தி இருந்து
சொடுக்குப் போட்டு எத்திப் பறந்து..
வில் விடு அம்பாக நீர் போவீர்.. இங்கு
கண் விடுநீரை யார் அறிவீர்?

அன்னைதனை இழந்து பிஞ்சு தவிப்பதும்..
பிஞ்சைப் பிரிந்து தாய் பிழிவதும்..
நெஞ்சை இடித்து நேசங்கள் அழுவதும்..
நீளும் செய்தி நாளும் விஞ்சுதடி நம்மில்.

ஐயகோ ! விபத்தின் கொலைவெறி..
தடுப்போம் தினம் இனி.
மனத்தில் உடுக்கடி..
எடுப்போம் சபதம் தனி.
காக்கிச் சட்டைகளே போடுங்கள் கிடுக்கிப்பிடி..!



இ. விஜய்
ஆசிரிய மாணவன்
2 ஆம் வருடம்
(2019 / 2020)
தமிழ்ப் பிரிவு.



# சக்தியின் சபதம்

## சிறுகதை


புண்ணியமூர்த்தி கோஜினா
ஆசிரிய மாணவி
கணிதம், முதலாம் வருடம்
கோப்பாய் ஆசிரிய
கலாசாலை




சக்தியின் தந்தை, தாய் ஒரு விபத்தில் இறந்து விட்டனர். வறுமையுடன் போராடிய குடும்பம். சக்திக்கு ஒரு சிறிய தம்பி இருந்தான். இருவரும் பாடசாலை செல்லும் பிள்ளைகள் ஆகையால் பாட்டியின் அரவணைப்பிலேயே வாழ்ந்தனர்.

இருவரையும் எப்படியாவது படிப்பித்து விட்டால் அவர்களின் வாழ்க்கை விடியலை நோக்கிச் சென்றுவிடும் என்று அடி மனதில் சபதம் கொண்டு தாங்க முடியாத கஸ்டங்கள் அனைத்தையும் தாங்கிகொண்டாள்.



நாள்கள் கடந்தன வருடங்கள் சென்றன. பாட்டிக்கோ வயதாகி விட்டது. கண் பார்வையும் இழந்துவிட்டது. சக்தி அதிகாலையில் எழுந்து வீட்டு வேலை அனைத்தையும் முடித்து, மூவருக்கும் அரை வயிறாவது ஆற உணவு செய்து, தம்பியை எழுப்பி தம்பியை பாடசாலை செல்வதற்கு தயார் செய்து, பாட்டிக்கு கண் தெரியாததால் பாட்டியின் அனைத்து வேலையையும் முடித்து அவள் பாடசாலை செல்லத் தயாராகி, இறைவனை வணங்கி, பாட்டியின் ஆசீர்வாதம் வாங்கி பாடசாலை செல்கிறார்கள் இருவரும். அப்போது சக்திக்கு வயது 10, தம்பிக்கோ 7 வயது மட்டுமே.

இவர்கள் பாடசாலை சென்றதும் பாட்டி இவர்களின் நிலையை நினைத்து தினமும் அழுது கொண்டு இருப்பார். எனினும் சக்தியிடம் அதனைக் காட்டிகொள்ளாமல் இருவருக்கும் ஊக்குவித்து ஆறுதல் கூறி அன்பாக இருப்பார். பாடசாலை முடிந்து வீடு வந்ததும் இருக்கின்ற உணவினை மூவரும் பகிர்ந்து பாதி வயிறு மட்டும் உண்டுவிட்டு வயலில் கூலிவேலை செய்தல், சிறுசிறு பொருளை விற்று வியாபாரம் செய்தல், என அனைத்து வேலைகளையும் செய்தும் போதிய அளவு உணவு உண்பதற்குகூட அதிகஸ்டமாக இருந்தது. தம்பி பசிதாங்க முடியாமல் சக்தியிடம் அழுதான். சக்திக்கோ மனம் கேட்கவில்லை. தனது சாப்பாடைக் கொடுத்தாள். சக்திக்கு என்ன செய்வது என்று அறியாமல் தவிர்த்து நின்றாள்.

எல்லோரும் பசி பட்டினியால் வாடினார்கள். பசிக்கொடுமையால் பாடசாலையில் ஒழுங்காகப் படிப்பைத் தொடரமுடியவில்லை. தங்களை வளர்த்த பாட்டியை ஒழுங்காகப் பார்க்க முடியவில்லை என்று மனதுக்குள் மரணவலி இருந்தாலும் அதனை வெளிக் காட்டிடாமல் முழுநேர விடா முயற்சி செய்து உழைத்து கொண்டு வாழ்க்கையை கடத்தினார்கள்.

சக்தி அதிக மனவுறுதி உடன் இருந்தாலும் வறுமையால் உடல் வலிமை அற்று இருந்தாள். பாடசாலையில் ஒருநாள் மயங்கி விழுந்துவிட்டாள். அப்பாடசாலையும் அதிகஸ்ட பாடசாலை, அப்பாடசாலையில் உள்ள அனைவரும் இவ் நிலையில் தான் உள்ளார்கள். அப் பாடசாலையில் கொடுக்கப்படும் உணவைநம்பியே பல பிள்ளைகள் பாடசாலை வருவார்கள். எல்லா பிள்ளைகளும் இவ்வறுமை நிலை யில்

உள்ளதால் அங்கு உள்ள ஆசிரியர் களுக்கு எந்த பிள்ளைக்கு உதவி செய்வது என்று அறி யாமல் அனைத்துப் பிள்ளைகளையும் சரிசமமா கப் பார்த்துப் பராமரித்து ஊக்குவித்து வந்தார் கள். மயங்கி விழுந்த சக்தியை அன்பாகக் கவ னித்து உணவு கொடுத்தார் சக்தியின் வகுப்பா சிரியர்.

அந்த ஆசிரியரின் முகத்தில் தன் அன்னை யைப் பார்த்த சத்தி அவரை அணைத்து தன் வறுமையை கூறி அவளை அறியாமல் அழுது விட்டாள். சக்தி மயங்கி விழுந்ததை அறிந்து அங்கு வந்த சக்தியின் தம்பி சக்தி அழுவதைப் பார்த்து வியந்து மனம் உடைந்து நின்றான். அன்றுதான் சக்தியின் தம்பி முழுமையாக தன் குடும்ப நிலை யினை உணர்ந்தான். சக்தியிடம் வந்த அவன் சக்தி அழுவதைப் பார்த்து அவ் இடத்தில் இருந்து விலகிச் சென்றுவிட்டான். குடும்பத்தின் வறுமை யைப் போக்கவேண்டும் என்று உறுதிகொண்டான்.

மனவலியுடனும் ஆறாத மனத்துடனும் பாட சாலை விட்டதும் வீடு வராமல் வேலை தேடித் தெருத்தெருவாக அலைந்தான். நேரம் ஓடியது மாலை ஆகியது. பாடசாலை விட்டு தம்பி வரவி ல்லை என சக்தி அனைத்து இடங்களிலும் தேடி அலைந்தாள். பிள்ளையைக் காணவில்லை என்ற ஏக்கத்தில் எதிர்பாராத நேரத்தில் பாட்டி உயிர் உலகை விட்டுப் பிரிந்துவிட்டது.

பாட்டி இறந்தது கூட சக்திக்குப் புரியவில்லை. சக்திக்கு இடிக்கு மேல் இடி. இறந்த பாட்டி வீட் டுக்குள், தம்பி தொலைந்த கவலை சக்தி மனதுக் குள். நிமிடம் கடந்து பலநேரம் கடந்தது. உயிர் அற்ற நடைப்பிணமாக ஆறுதல் தேடிப் பாட்டி அருகில் வந்து பாட்டியை எழுப்பினாள். பாட்டி எழும்பவில்லை. சத்தமிட்டு அழுதாள். அவள் அழு கைக்குரல் கேட்டு அருகில் உள்ளவர்கள் அவ் விடத்திற்கு வந் தார்கள். பாட்டி இறந்த செய் தியை உணர்ந்த அயலவர்கள் சக்திக்கு ஆறு தல் கூறிப் பாட்டி இற ந்த செய்தி யை கூறி னார்கள். விறைத்து போனாள் சக்தி. நிலை குலை ந்து அழுது என்ன செய்வது என்று தடுமாறினாள்.

பாட்டியின் இறுதிக் கிரிகைக்கு கையில் பணம் இல்லை. ஆறுதலாக இருந்த தம்பியைக் காண வில்லை என்ற மரணவலியில் இருந்த சக்திக்கு அடுத்த இடி காத்திருந்தது. சக்தியின் வீட்டுக்குப் பொலிசார் விசாரணை செய்யவந்தனர். சக்தியின் தம்பி வேலைதேடிச் செல்லும்போது பாதைமாறி நெடுந்தூரம் சென்றதும் தனது வீடு இருந்த தெரு வைத் தொலைத்துச் சென்று தடுமாறி நின்றான். பாழடைந்த இடத்தில் செய்வது அறியாத இருந்த அவனுக்கு பாம்பு தீண்டிப் பரிதாபமாக உயிர் இழந்த நிலையில் சடலமாகக் கண்டுபிடித்த பொலி சார் அவன் சடலத்தை உறுதிபடுத்திக் கொள்ளவே சக்தியின் வீட்டுக்கு வந்தனர். சக்தியிடம் சடலத்தை திறந்து காட்டியவுடன் சக்தி கதறிக் கட்டி அணை த்து அழுதாள். ஒரே நேரத்தில் சக்திக்கு ஆறுத லாக இருந்த இரு உயிரையும் இழந்து நிலை குலைந்து நின்றாள். அயலவர்களின் உதவியால் எல்லாச் சடங்குகளையும் முடித்து அழுதுகொண்டு இருந்தாள்.

அவளின் பாடசாலை ஆசிரியர்களின் உதவி யால் அனாதை ஆசிரமத்தில் சேர்ந்தாள். வறுமை யாலே என் உயிராக இருந்த ஆறுதல்களை இழந் தேன் என்று உணர்ந்தாள். இவ் வறுமையை ஒழிக்க கல்வியே சிறந்த ஆயுதம் என உணர்ந்து இரவு பகலாக நன்றாகப் படித்தாள்.

தன் தாயையே மறு வடிவில் என் ஆசிரியரில் தான் பார்த்தேன் என்று எண்ணினாள். ஒரு ஆசி ரியராக வந்தால் மட்டுமே வறுமையை ஒழிக்க லாம் என எண்ணினாள். நல்லதொரு ஆசிரியராக உருவாகி முதலில் வறுமையை ஒழித்துக் கல்வியை வழங்க அரும்பாடு படுவேன் என்று சபதம் பூண்டாள்.

(யாவும் கற்பனை)



# பிரயோகத்தமிழ் எது பிழை எது சரி

## (தமிழ்மொழிப் பிரயோகம் பற்றிய ஒரு விழிப்புணர்வுத் தொடர்)



வேல்நந்தகுமார் (MA in Tamil MEd SLTES)
விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

03

பிரயோகத் தமிழ் எது பிழை எது சரி என்ற தலைப்பில் எழுதிவரும் தமிழ்மொழிப் பிரயோகம் குறித்த இவ் விழிப்புணர்வுத் தொடரை இத்தொடருடன் நிறைவுக்கு கொண்டுவரலாம் என எண்ணுகிறேன்.

தமிழ்மொழியின் பிரயோகப் பிழை என்பது ஆரம்பக்கல்வி மட்டத்திலேயே ஆரம்பிக்கிறது. அங்கு சரியான கேட்டல், வாசிப்பு, உச்சரிப்புப் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் எழுத்துப் பிழைகளைத் தவிர்க்க முடியும். அந்த வகையில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் வகுப்பறைக் கலைத்திட்டம் என்பவற்றுக்கு அப்பாலும் இதற்காக இயங்கவேண்டிய நிலை உள்ளது. பொதுவாக மாணவரிடம் தாய்மொழிப் பிரயோக நிலை சார்ந்து பின்வரும் பிழைகளை அவதானிக்க முடிகிறது.

*. எழுத்துப் பிழைகள்
*. லகர,ழகர,ளகர, ண,ந,ன, ரகர, றகர, பிழைகள்
*. திணை, பால், எண், இட, காலப்பிழைகள்
*. பொருள் மயக்கம் ஏற்படும் வகையில் எழுதும் பிழைகள்.
*. பிறமொழிச் சொற்களை கலந்து எழுதுதல்
*. பிரதேச பேச்சுவழக்கு சார்ந்த வகையில் எழுதுதல்.
*. இலக்கண விதிசார்ந்த பிழைகளுடன் எழுதுதல்.
*. புணர்ச்சிப் பிழைகளுடன் எழுதுதல்
*. எழுவாய் பயனிலை இயைபின்றி பிழைவிட்டு எழுதுதல்.
*. மெய்யெழுத்தை கோட்டின் தொடக்கநிலை எழுத்தாக எழுதுதல்.
*. குற்று இடுவதற்குப் பதிலாக எழுத்துக்களின் மேல் வட்டம் போட்டு எழுதுதல்.
*. பொருத்தமான இடைவெளிகளை விடாமல் எழுதுதல்.
*. எழுத்துப் பொறிமுறையை அனுசரிக்காமல் எழுதுதல்.
*. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடாமல் எழுதுதல்.

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை ஒவ்வொன்று குறித்தும் விரிவாக விளக்க பக்கவரையறை தடையாக அமைவதால் இவற்றைக் குறித்துக்காட்டி கடந்துசெல்கிறேன். இப்பிழைகளை மாணவர்கள் விடாமல் இருக்கவேண்டுமானால் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் குறிப்பாக ஆரம்பக்கல்வி மற்றும் தாய்மொழிப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இவ்விடயங்களில் பூரண அறிவுள்ளவர்களா விளங்கவேண்டியது அவசியமானதா



கும். சந்தேகங்கள் இருந்தால் சரியானவர்களிடம் கேட்டுத்தெளிவு பெற்றுக்கொள்வதும், மொழி அக ராதிகளைக் கையாள்வதும், தம்மை இற்றைப்படுத் திக் கொள்வதும் அவசியமாகும். அந்த வகையில் இக்கட்டுரைத் தொடரில் வகை மாதிரியாக சில எழுத்துப் பிழையான சொற்களும் அவற்றுக்கான சரியான சொற்களையும், எது வடமொழிச் சொல் எது தூய தமிழ்ச்சொல் என்பது குறித்த சில விளக்கங் களையும் கடந்த தொடர்களிலே பகிர்ந்துள்ளேன். இத்தொடரில் சில விசேட சந்தர்ப்பங்களில் கையா ளப்படும் சொற்களின் பிரயோகப் பிழைகளையும் அவற்றுக்கான சரியான விளக்கங்களையும் சிந்திக் கலாம் என எண்ணுகிறேன்.

வழக்கத்திலே ஒரு சொல்லுக்குரிய பொருளைப் பிழையாக விளங்கிக் கொள்வதால் ஏற்படுகின்ற பிழை அல்லது இலக்கண வழக்கு மாறாகப் பயன் படுத்தலாகிய பிழை அல்லது மரபு முறைக்கு மாறாகப் பிழைபடப் பயன்படுத்தலாகிய பிழை என்பவற்றை வழக்குப் பிழைகள் என்பார்கள். இன்று பத்திரிகைள் உட்பட பல ஊடகங்களில் இத்தகைய வழக்கு பிழைகள் மலிந்து வருவதையும் காண முடிகிறது. அந்த வகையில் தமிழில் எராளமான வழக்குப் பிழைகள் உள்ள போதும் ஒரு சிலவற்றை மட் டும் இங்கு குறிப்பிடலாம் என எண்ணுகிறேன்.

*. வாழ்த்துக்கள் என எழுதுவது தவறு வாழ்த் துகள் என்பதே சரி ஆனால் இன்று முகநூலில் வாழ்த்துக்கள் என்றே பதிவிடுகின்றனர். இதற்கு ரிய இலக்கண விளக்கம் யாதெனில் வாழ்த்து ஒரு குற்றியலுகரச்சொல், குற்றியலுகரச் சொற்க ளோடு 'கள்' விகுதி சேரும்போது அவற்றுக்கு இடையில் ககர வல்லொற்று மிகுதல் வழுவாகும். படைப்புகள், பாட்டுகள் இவ்வாறே அமையும். இதேபோலவே நாள்கள், பொருள்கள் என்பவனவும் விகாரமடையாமல் அவ்வாறு வழங் குதலே சரியாகும். வேற்றுமை ஏற்கு மிடத்து மட்டும் அவை விகாரமடை யும்.

*. ஒவ்வொரு, ஒவ்வொன்று

ஒவ்வொரு அல்லது ஒவ் வொன்று என்ற ஒருமை எண்ணில் வந்த சொல்லைத் தொடர் ந்து பன்மை வருவது பிழை ஒருமையே வரும்.

**உதாரணம்**:- ஒவ்வொரு ஊர்களிலும் தேர்தல் பிர சாரம் நடைபெறுகிறது. - பிழை




*. ஒவ்வொரு ஊரிலும் தேர்தல் பிரசாரம் நடை பெறுகிறது - சரி

*. மாம்பழங்கள் ஒவ்வொன்றும் இனிமையானவை - பிழை.

மாம்பழங்கள் ஒவ்வொன்றும் இனிமையானது -சரி

*. அல்ல, அன்று

அல்ல என்பது அ்.றிணைப் பன்மை வினை முற்று அன்று என்பது அ்.றிணை ஒருமை வினை முற்று

**உதாரணம் :-** அவன் கொடுத்த புத்தகம் இது வல்ல - பிழை

அவன் கொடுத்த புத்த கம் இதுவன்று - சரி.
அவள் தொலைத்த நகைகள் இவையன்று - பிழை.
அவள் தொலைத்த நகைகள் இவையல்ல - சரி

**இதேபோல உயர்திணையில்**

உங்கள் பொருளைத் திருடியவன் அவனல்ல என்பது வழு அவனல்லன் என்பதே சரி

*. மங்களம், மங்கலம்

மங்களகரமான ஆண்டு என அழைப்பிதழில் அச்சிடுவது தவறு மங்கலம் என்பதே சரி.

மங்கல இசை, என்பதே சரி

மங்கள இசை என்றால் அது ஒப்பாரி அல்லது இறுதிப்பாடல் எனப் பொருள்படும்.

வில்லுப்பாட்டில் மங்களம் பாடுவது என்பது இறுதிப் பாடல் என்ற கருத்திலேயே ஆகும்.

திருவள்ளுவர் கூட,

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட்பேறு" என்றே கூறுகிறார். அதேபோல வாழ்க வள முடன் என்பது தவறு. வாழ்க வளத் துடன் என்பதே சரி.

*. சாரதிகளின் கவனயீனமும் மது போதையுமே

கூடுதலான விபத்துக்கள் இடம் பெறுவதற்கான காரணம் என பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவ்வாக்கியத்தில் பல தவறுகள் உள் ளன. சாரதி உயர் திணைச் சொல் அது அ்.றிணைப் பன்மைக்குரிய 'கள்' விகுதியோடு இணைந் தமை தவறு.

விபத்துக் காரணங்கள் இரண்டு அவ்வாறிருக்க காரணம் என ஒருமையில் நின்றது தவறு. கவன யீனம் தவறான சொற்புணர்ச்சி அது கவனவீனம் என செப்பம் செய்யப்பட வேண்டும்.

'காவல் துறை' இருக்க பொலிஸ் என ஆங்கில சொற்பிரயோகம் இடம்பெற்றதும் தவறு. இவற் றைச் சரியாக்கி எழுதினால் இவ்வாக்கியம் இவ் வாறு அமையும். சாரதியரின் கவனவீனமும் மது போதையுமே கூடுதலான விபத்துக்கள் இடம்பெறு வதற்கான காரணங்கள் என காவல் துறை அறிக் கைகள் தெரிவிக்கின்றன.

*. தாலாட்டு பாடினான் என்பதா தலாட்டுப் பாடி னான் என்பதா எது சரி என வினாவின் இரண்டும் சரி என்பதே விடையாகிறது. எப்படியென்றால் தாலா ட்டு பாடினான் என்றால் தாலாட்டைப் பாடினான் என்பது பொருள் இங்கே ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து நிற்கிறது. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வலிமிகாது என்பது விதி எனவே தலாட்டு பாடினான் என எழுதுவது சரி. அதேபோல தாலாட்டு என்ற சொல் ஒரு குற்றியலு கரத்தொடர் அவ்வாறு அமையும்போது வருமொழி முதல் வல்லினமாய் இருந்தால் வலிமிகும் என்ற விதிக்கு அமைய தாலாட்டுப் பாடினான் என எழுது வதும் சரி.

***. என் மகன் எனது மகன் எது சரி**

உயர்திணை ஒருபோதும் உடைமைப் பொருள் ஆகாது என் பது இலக்கண விதி ஆகவே எனது மகன் என்று எழு துவது தவறு என்




மகன் என எழுதுவதே சரி. என் மகன் என் பது எனக்கு மகன் என்பதன் குறுக்கம் எனது வீடு, எனது செல் வம் என்று எழுதலாம் ஆனால் எனது கணவன் எனது தாயார் என்று எழுதினால் அது தவறு.

***. இயல்பு புணர்ச்சியா, இயல்புப் புணர்ச்சியா எது சரி?**

இயல்பு புணர்ச்சி என்ற இரு சொற்கள் சேரும் போது இயல்பு புணர்ச்சி என்றே எழுதவேண்டும் என்கிறது. இலக்கணம் இயல்பு என்பதில் இடைத் தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் மொழி முதல் வந்தால் வலிமிகாது என்பதே விதி.

***. ஓரும், ஒருவும்**

ஓர் என்பது உயிரெழுத்தை முதலாகக் கொண்ட சொல்லின் முன்பும் ஒரு என்பது மெய்யெழுத்தை முதலாககொண்ட சொல்லின் முன்பும் வரும் என் பதே மரபிலக்கணம் இதேபோன்றே ஈர், இரு என் பதும் அமையும்.

**உதாரணம்** :- ஓரேர் உழவன்
ஒரு மகள் உடையேன்
ஈராண்டு (ஈர் + ஆண்டு)
இருவினை

தற்கால மொழியியலாளர்கள் ஓர் பற்றிய விதி யைமட்டும் ஏற்று (அது மரபிலக்கியங்களில் மட் டுமே பயின்றுவரும் தன்மை கருதி) ஒரு என்பதை உயிர் எழுத்தின் முன்பும் மெய்யெழுத்தின் முன் பும் எழுதுவதில் தவறில்லை என்கின்றனர்

ஒரு ஆசிரியர்
ஒரு முறை
ஒரு ஊர்

*. ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலை மொழி அஃறிணையாயிருக்க வருமொழி முதலெழுத்து வல்லினமா யின் வல்லினம் மிகும். ஆனால் உயர் திணையாயின் வல்லினம் மிகாது. இதன்படி அண்ணாமலை பல்கலைக் கழகம் என எழுதுவதே சரி. அண்ணா மலைப் பல்கலைக் கழகம் என எழுதுவது தவறு. ஆனால் சென்னைப் பல்கலைக் கழகம் என எழுதுவது சரி.

***. வரட்சி என்பதா வறட்சி என்பதா.**

வறம் கூர்ந்த என்று ஒரு சொற்றொடர் பெரும் பாணாற்றுப் படையில் வருகிறது. வறத்தில் சாவாது என்று ஒருதொடர் புறநானூற்றில் வருகிறது. மேற் படி சொற்றொடர்களில் 'வறம்' என்பது வற்றுதல், நீரற்றுப் போதல், காய்ந்து போதல் என்ற பொரு ளிலேயே வருகிறது. வறளுதல் என்றால் வற்றுதல் என்று பிங்கல நிகண்டும் சொல்கிறது. ஆனால் வரள் என்ற ஒரு சொல் இருப்பதாக அகராதிகள் காட்ட வில்லை ஆகவே வறள் என்பதே சரி.

***. கருப்பா கறுப்பா எது சரி**

இதற்கு விடை சொல்வது கடினம். அதற்குக் காரணங்கள் உண்டு. கரும்புடையன் என்பது ஒரு பாம்பின் பெயர். கரும்புள் என்பது ஒருவகை வண் டின் பெயர். இதைவிட கருமணல், கருமேகம், என்ற சொற்களும் உள்ளன. மேற்கண்டவாறு இரு த்தலால் கருப்பு என்பதே சரியென்று கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் நடைமுறையில் கறுப்பு என எழுதுவதே பெரு வழக்காக உள்ளது. தொல் காப்பியக் கூற்றான 'சிதைத்தன வரினும் இயந்தன வரையார் என்ற நூற்பா கறுப்பு என்ற சொல்லுக்கும் பொருந்தும் போலும் இதனை ஏற்றுக்கொண்ட பிங்கல நிகண்டு கருப்பும் கறுப்பும் ஒரு பொருள் என்று கூறுகிறது.

கறுப்புப் பயறு, கறுப்புப் புள்ளி, கறுப்பாடு, கறுப்புப் பட்டியல், கறுப்பு வெளவால், கறுப்பு யூலை என்பதே இலக்கியம் காணாத பிற்காலச் சொற்கள். எனவே இரண்டு முறையில் எழுதினா லும் சரி என்று சொல்லலாம். "கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள்" என்று தொல்காப்பியர் உரியி யலின் 74 ஆம் சூத்திரத்தில் கூறியிருக்கிறார். அவரே 75 ஆம் சூத்திரத்தில் நிறத்துரு உணர்த்தற் கும் உரிய என்ப' என்கிறார். ஆகவே கறுப்பு என் பது தொல்காப்பியர் காலத்தில் வழங்கியது என்று சொல்லவும் இடமுண்டு.

*. வாக்கியங்களில் சொற்களை பிழையான இடங் களில் போடுவதாலும் பல கருத்துப் பிழைகள் ஏற்படுகின்றன. இன்றைய பத்திரிகைகளில் வரும் சில செய்திகளும் இதற்கு சான்றாகின்றன.

**உதாரணம் - ஆக**

வவுனியாவில் ஜனாஸா எரிப்புக்கு எதிராகப் போராட்டம். என எழுதினால் இங்கு வவுனியாவில் தான் ஜனாசா எரிக்கப்படுகிறதோ என்ற கருத்து மயக்கம் ஏற்படும் எனவே, ஜனாசா எரிப்புக்கு எதிராக வவுனியாவில் போராட்டம் என்றே இச் செய்தி அமையவேண்டும்.

அதேபோல, மன்னாரில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. என்பதில் மோசமான என்ற சொல், ஆசிரியரைக் குறிக்கும் கருத்து மயக் கம் உள்ளது. இதனை சரியாக்கி எழுதினால் 'மன் னாரில் ஆசிரியர் பாற்றாக்குறை மோசமாக நிலவு கிறது' என அமையும்.

இதேபோல பின்வரும் சொற்களையும் நாம் அவற்றின் சரியான கருத்துணர்ந்து சரியான சந் தர்ப் பங்களில் பயன்படுத்த வேண்டியது அவசிய மாகும்.

| | |
|---|---|
| அதிகம் | - அநேகம், |
| உபயோகித்தல் | - பாவித்தல் |
| வேண்டுதல் | - வாங்குதல் |
| மேய்தல் | - வேய்தல் |
| அவசரம் | - அவசியம் |
| ஏத்துதல் | - ஏற்றுதல் |
| திறத்தல் | - துறத்தல் |
| முத்தம் | - முற்றம் |
| சமுகம் | - சமூகம் |
| சாட்டுதல் | - சாற்றுதல் |
| ஈண்டு | - ஈன்று |
| குரை | - குலை |

பிரயோகத் தமிழ்ப் பிழைகளை இன்னமும் பேசிக்கொண்டே இருக்கலாம். இக் கட்டுரைத் தொடர்கள் தாய்மொழிப் பிரயோகம் குறித்ததோர் விழிப்புணர்வை உங்களிடம் எற்படுத்தி இருக்கும் என்ற நம்பிக்கையுடன் வாய்ப்புக்கு நன்றி சொல்லி நிறைவு செய்கிறேன்.

**உசாத்துணைகள்**


1. கணபதிப்பிள்ளை.மு, தமிழ்மொழி வழிகாட்டி, குமரன் புத்தக இல்லம் மீளச்சு - 2016.
2. சிறீக்காந்தராசா.செ, இனிக்காதா இலக்கணம் - குமரன் புத்தக இல்லம் - 2015.
3. கணபதிப்பிள்ளை.க, பைந்தமிழைப் பாதுகாப் போம் - மாணிக்கவாசகர் வித்தியாலயம் - கரவெட்டி - 2010.
4. பொற்கோ - இலக்கண உலகில் புதிய பார்வை, நியு சென்சூரிபுக் ஹவுஸ் - 2005 (மூன்றாம் அச்சு).
5. நன்னன்.மா, செந்தமிழா கொடுந்தமிழா - நேசம் பதிப்பகம் - (2007).
6. நுஃமான்.எம்.ஏ, அடிப்படைத் தமிழ் இலக்கணம் பூபாலசிங்கம் புத்தகசாலை - (2010).
7. பஞ்சாரட்சரம்.ச.வே, தமிழ் இலக்கணப் பூங்கா (2010 ஐந்தாம் பதிப்பு).
8. விரகத்தி.க, பிற்கால இலக்கண மாற்றங்கள் - குமரன் புத்தகசாலை (2018).
9. முரளி.சோ, தமிழ்மொழி விளக்க கைந்நூல்.
10. நன்னூல், தொல்காப்பிய உரைகள்.
11. நாகலிங்கம்.க, செந்தமிழ் இலக்கண விளக்கம்
12. அரங்கராசன் - தவறின்றித் தமிழ் எழுத.
13. வேலுப்பிள்ளை.ஆ, தமிழ் வரலாற்றுக் இலக் கணம் - குமரன் புத்தக இல்லம் - 2007.
14. பேராசிரியர் அ.சண்முகதாஸ், தமிழ்மொழி இலக்கண இணைல்புகள்.
15. தவசேகர்.த, பொது உளச்சார்பும் மொழித் திறனும், (போட்டிப் பரீட்சை வழிகாட்டி)
16. உலகத் தமிழ்த்தளம் - இணையப் பக்கம்.

# யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரியின் பதிவாளர் ஓய்வுபெற்றார்.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பதிவாளராகப் பணியாற்றியவரும் ஆசிரிய கல்வியாளர் சேவை விரிவுரையாளருமாகிய கந்தையா கமலநாதன் கடந்த 07.12.2020 அன்று அரச சேவையில் இருந்து இளைப்பாறுகை பெற்றார். 08.12.2020 அன்று அவரது மணிவிழா நாள் ஆகும். துன்னாலை கரவெட்டியைச் சேர்ந்த கல்வியாளர் கமலநாதன் கணிதத் துறையில் சிறப்புப் பட்டத்தையும் ஆசிரிய கல்வியில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றவர். கணினித் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தமையால் கொம்பியூட்டர் கமலநாதன் என அன்பாக அழைக்கப்பட்டார். 2001 இல் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் தனது கடமைகளை ஆரம்பித்து விரிவுரையாளர், உப பீடாதிபதி (நிதி - நிர்வாகம்) (2003 - 2004) பதிவாளர் எனப் பல்வேறு பதவிகளை வகித்தார்.

மத்திய கல்வி அமைச்சின் தற்போதைய நடைமுறைப் பிரகாரம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பணியாளர் சம்பளம் தவிர்ந்த பல்வேறு கணக்குகள் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியினாலேயே முகாமை செய்யப்படுகின்றன. இவற்றை நடைமுறைப்படுத்தும் பிரதான அலுவலராக பதிவாளர் திரு க.கமலநாதன் திறம்படச் செயற்பட்டார். இவரது பணிகளைக் கௌரவிக்கும் வகையில் கடந்த 07.12.2020 திங்கட்கிழமை தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்விசாராப் பணிக் குழுமத்தினர் சேவை நயப்பு விழாவை முன்னெடுத்திருந்தனர். இதன்போது கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் வாழ்த்துரை வழங்கியும் பிரதி அதிபர் ச.லலீசன், உப அதிபர் வீ.கோபாலகிருஸ்ணன் ஆகியோர் அதிபருடன் இணைந்து பொன்னாடை அணிவித்தும் கலாசாலைச் சமூகத்தின் சார்பில் மதிப்பளித்தனர். கல்வியாளர் க.கமலநாதனின் ஓய்வுக்காலம் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

வீ.கருணலிங்கம்
(அதிபர்)

# கலாசாலையின் கல்விசாராப் பணியாளர் அருமை ஓய்வு பெறுகிறார்

கலாசாலை நிகழ்வுகள்ில் ரி.எம்.எஸ்.இன் குரலில் மாத்திரமல்லாது பெண் குரலிலும் பாடி அசத்தும் பிணி ஆய்வுகூடப் பணியாளர் (Sick room attendant) சின்னப்பு அருமைநாயகம் அகவை அறுபது எய்தி எதிர்வரும் 03.01.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று பணி ஓய்வு பெறுகின்றார். இவரது அறுபதாவது பிறந்தநாள் எதிர்வரும் 04.01.2020 திங்கட்கிழமை ஆகும்.

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் அனலைதீவை வதிவிடமாகவும் கொண்டவர் அருமைநாயகம். பலாலி ஆசிரிய கலாசாலையில் அமைய அடிப்படையில் 1979 இல் கடமைகளை ஆரம்பித்து 1983 இல் நிரந்தர நியமனம் பெற்றார். அருமையின் தந்தையும் பலாலி ஆசிரிய கலாசாலையில் பணியாற்றியவர் ஆவார். அதிபர் கந்தசாமி தொடக்கம் பல்வேறு அதிபர்களின் கீழ் பணியாற்றிய இவர் பலாலி ஆசிரிய கலாசாலை கோப்பாய் ஆசிரிய கலாசாலையுடன் இணைக்கப்பட்டமையைத் தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு உள்வாங்கப்பட்டார். நகைச்சுவை உணர்வுடன் சக பணியாளர்களுடன் பழகும் அருமையின் ஓய்வுக் காலம் இனிதே அமையக் கலாசாலைக் குடும்பத்தினரின் இனிதான வாழ்த்துகளை நவில்கின்றோம்.



சத்தியாரஞ்சித்
(சிரேஸ்ட விரிவுரையாளர்)

# கோப்பாய் கலாசாலையில் சிறப்புற இடம்பெற்ற மரநடுகை நிகழ்வு

கோப்பாய் ஆசிரிய கலாசாலை வளாகத்தில் கடந்த 18.12.2020 வெள்ளிக்கிழமை காலை மர நடுகை நிகழ்வு இடம்பெற்றது. கலாசாலை சமூகத்தினரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி சமூகத்தினரும் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்றிட்ட (NSBS Proj□ct) வட மாகாண அலுவலகத்தினரும் இணைந்து தேக்கு மரங்களை நாட்டினர்.

NSBS Proj□ct பொறியியலாளர் ஜெ.வாசுதேவன் மற்றும் சாருகஜா கட்டட ஒப்பந்தகாரர் நிறுவனப் பொறியியலாளர் நவரட்ணம் நந்தரூபன் ஆகியோர் இதற்கு அனுசரணை புரிந்தனர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி சு.பரமானந்தம் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.

பொறியியலாளர் ஜெ.வாசுதேவன் நிறைவுறை ஆற்றினார். அவர் தனது உரையில் கலாசாலையின் புனர்நிர்மாணப் பணிகளின் போது அதிகளவு மரங்களை வெட்டிச் சாய்க்கவேண்டி நேரிட்டதாகவும் இது தமக்கு வருத்தம் அளித்ததாகவும் இதனை நிவர்த்திக்கவே இந்த மரநடுகையைத் தாம் மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். இந்த மரங்கள் உங்கள் பராமரிப்பில் மூன்று வருடங்கள் நின்றுவிட்டால் பின்னர் அவை தமக்கான வாழ்வை அமைத்துக்கொள்ளும் என்றார். கோடை காலத்தில் மரங்களின் தாகம் தீர்க்கத் தண்ணீர் விடுவது பற்றி மரத்தை நாட்டியவர்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

நிகழ்வில் கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி செல்வமலர் செல்வராஜா, பதிவாளர் அருள்நேசன் மற்றும் விரிவுரையாளர்கள், கல்விசாராப் பணியாளர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் உப அதிபர் த.கோபாலகிருஸ்ணன், விரிவுரையாளர் கழகத் தலைவர் க.செந்தில்குமரன், விரிவுரையாளர்கள், கல்விசாராப் பணியாளர்கள், அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்றிட்ட தொழினுட்ப உத்தியோகத்தர் ரி.யோகசீலன் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் மர நடுகை நிகழ்வில் பங்குகொண்டதுடன் தேக்கு மரங்களை நாட்டி வைத்தனர். மரநடுகை நிகழ்வின் நிறைவில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபரால் தேநீர் விருந்துபசாரம் மேற்கொள்ளப்பட்டது.















## கலாதீபம் வாசகர்களுக்கு

கடந்த 2020 அக்டோபர் தொடக்கம் கலாதீபம் என்ற மின்னிதழை கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகத்தை மையப்படுத்திப் பிரசுரிக்க ஆரம்பித்துள்ளோம். இந்த இதழை ஆவணப்படுத்தும் நோக்குடன் இதன் வன்பிரதிகள் கலாசாலை நூலகத்தில் பேணப்படுகின்றன. இதனை விட தமிழர் வரலாற்றை ஆவணப்படுத்தும் நூலகம் என்ற இணையத்தளத்திலும் கலாதீபம் மென்பிரதி ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய சூழலில் 35 விரிவுரையாளர்கள் 550 வரையான ஆசிரிய மாணவர்கள் கலாசாலையில் உள்ள நிலையில் கலாதீபத்தை அவர்களது வாண்மை விருத்திக்கான இதழாக முகிழ்த்தெழச் செய்யவேண்டும் என்பதே எமது விருப்பம் ஆகும்.

கலாதீபத்தைப் பிரசுரிப்பதற்கான கலாசாலையின் நிர்வாகம் சார்ந்த ஆதரவு மற்றும் கணினியில் இதனை வடிவமைப்பதற்கான போதிய ஆளணி வளம் என்பன எம்மிடம் உள்ளபோதிலும் இலவச வெளியீடாக இதனை மேற்கொண்ட நிலையிலும் கலாதீபத்திற்கான போதியளவு ஆக்கங்களை வழங்கக்கூடிய நிலையில் எமது கலாசாலைச் சமூகத்தினர் காணப்படாமையை வருத்தத்துடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இந்நிலையில் மாதம்தோறும் கலாதீபத்தை மலரச் செய்வதில் - தரமான ஆக்கங்களுக்கான தட்டுப்பாடு பெரும் தடையாக நிலவுவதால் கலாதீபத்தின் வெளியீட்டை காலாண்டிற்கு ஒருமுறை நிகழ்த்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றோம். ஆர்வமுள்ள வாசகர்கள் பொறுத் தருள்வார்களாக.

**- கலாதீபம் குழுவினர் -**